www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

CPI 100 Years இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925-2025

மலர் 88 இதழ் 5 | 2025 மே 04 - மே 10 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

# பயங்கரவாதத்திற்கு எதிராக உலகளாவிய பொதுக்கருத்து

## ஒன்றிய அரசுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு வலியுறுத்தல்




**பயங்கர வாதத்திற்கு எதிராக, வலுவான உலகளாவிய பொதுக்கருத்தை உருவாக்குவதற்கான முன்னெடுப்புகளை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.**

கேரளாவின் திருவனந்தபுரத்தில் 2025 ஏப்ரல் 24, 25 அன்று நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

### மே 20, வேலை நிறுத்தம் வெற்றி பெறுக!

மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில் வாரி கூட்டமைப்புகள் மற்றும் சங்கங்கள், மார்ச் 18, 2025 அன்று டெல்லியில் நடத்திய தொழிலாளர் தேசிய மாநாடு, மே 20ஆம் தேதி பொது வேலை நிறுத்தம் செய்வதென அழைப்பு விடுத்துள்ளது.

இந்த வேலைநிறுத்த அழைப்பு, நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை நிர்பந்தமாகச் செயல்படுத்த முயற்சி செய்தல், பொதுச் சொத்துகளைத் தனியார்மயமாக்குதல், மானிட்டைசேஷன் பைப் லைன் என்ற பெயரில் பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் சூறையாட அனுமதித்தல் போன்ற மத்திய அரசின் தொழிலாளர் விரோத, விவசாயி விரோத, தேச விரோதக் கொள்கைகளுக்கு எதிரான ஒன்றிணைந்த போராட்டத்தை இந்த அழைப்பு முன்னெடுக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்து விடாமுயற்சியுடன் போராடுவதன் மூலம் தொழிலாளர்கள் வென்றெடுத்த பல தொழிலாளர் உரிமைகளை நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் பறிக்கின்றன. 15 சட்டங்கள் கைவிடப்பட்டு, மீதியுள்ள 29 தொழிலாளர் சட்டங்கள், நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளாக மாற்றப்படுகின்றன.

இவை கோவிட் அபாயம் இந்தியாவைச் சூழ்ந்திருந்த போது நாடாளுமன்றத்திலோ அல்லது இந்தியத் தொழிலாளர் மாநாட்டிலோ எந்த ஆலோசனையும் இல்லாமல் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்டன. தொழிலாளர் சட்டங்கள் வணிகத்தை எளிதாக்குவதற்காக, அதாவது நிறுவனங்களுக்கு வசதி செய்வதற்காக உருவாக்கப்பட்டது என்று மத்திய அரசு வெளிப்படையாகவும் வெட்கமின்றியும் அறிவித்தது.

இந்தத் தொழிலாளர் சட்டத் தொகுப்புகளைச் செயல்படுத்துவதற்குப் பொருத்தமான விதிகளை வகுக்குமாறு மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.

வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்வதற்காக, கோரிக்கைகளை தொழிலாளர்களிடமும் விவசாயிகளிடமும் பொதுமக்களிடமும் எடுத்துச் செல்வதற்கு விரிவான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

உழைக்கும் மக்களுக்கு நீண்டகால பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய இந்த அப்பட்டமான பெருநிறுவனச் சார்பு கொள்கைகளை மத்திய அரசு கைவிட வேண்டும் என்று இந்தத் தேசியக் குழு கூட்டம் கோருகிறது.

மே 20, 2025 அன்று நடைபெறும் அகில இந்தியப் பொது வேலைநிறுத்தத்தை வெற்றி பெறச் செய்ய இணைந்து செயல்படுமாறு இந்தத் தேசியக் குழுக் கூட்டம் இந்திய மக்களை கேட்டுக் கொள்கிறது.

### தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை பாதுகாத்திடு! எண்ம தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டம் மறுபரிசீலனை செய்!

டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டம், 2023 (டிபிடிபி) விதிகள் குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறது.

டிபிடிபி சட்டத்தின் பிரிவு 44(3) அனைத்துத் தனிப்பட்ட தகவல்களையும் வெளியிடுவதிலிருந்து விலக்கு அளிக்க தகவல் உரிமைச் சட்டத்தைத் திருத்துகிறது. தகவல் உரிமைச் சட்டப்படி, எந்தவொரு பொது நடவடிக்கை அல்லது பொது நலனுடனும் தொடர்பில்லாமல் இருந்தால் மட்டுமே தனிநபர் குறித்த விவரங்களைத் தர மறுக்கலாம்.

இப்போது அந்தச் சட்டத்தின் பிரிவு 8(1)(j) திருத்தப்படுகிறது. தனிநபர் குறித்த தகவல்களை வெளியிடுவதற்கு அது தடை விதிக்கிறது. ஊழலை வெளிப்படுத்துவதற்காக, பொறுப்பு தவறுகிற அரசு அதிகாரிகளின் நடவடிக்கைகளைக் குறித்த தகவல்களைக் கேட்டால், தனிநபர் எனும் பெயரில் தவறு செய்பவர்களின் பெயர்கள், ஒப்பந்ததாரர்களின் பெயர்கள், பொதுத் திட்டங்கள் மற்றும் அரசுப் பணிகளைக் கண்காணிப்பதற்கான நபர்களின் பட்டியல்களைத் தர முடியாது என்று இந்தத் திருத்தம் கூறுகிறது.

நாடாளுமன்றத்திற்கோ அல்லது மாநிலச் சட்டமன்றத்திற்கோ மறுக்க முடியாத தகவல்களை எந்தவொரு நபருக்கும் மறுக்கக் கூடாது என்று கூறும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 8(1)ன் விதிமுறை கூட டிபிடிபி சட்டத்தில் நீக்கப்பட்டுள்ளது.

தகவல் உரிமைச் சட்டத்தை இந்த வகையில் பலவீனப்படுத்துவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கண்டிக்கிறது. தரவுப் பாதுகாப்பு என்ற போர்வையில், பொறுப்புக்கூறலைத் தேடுவதற்கும் மக்களுக்கு உள்ள அடிப்படை உரிமையை அரசாங்கம் கட்டுப்படுத்துகிறது என்பது தெளிவாகிறது. ஜனநாயக வழிமுறையில், பொருள் பொதிந்த, தகவல்களை அறிந்து கொண்டு கடமையாற்றுவதற்குத் தகவல் உரிமைச் சட்டம், மக்களுக்குத் தந்துள்ள அதிகாரத்தை, இந்தத் திருத்தம் பறிக்கிறது.

முக்கியமான தகவல்களைச் சேகரித்து, பகுப்பாய்வு செய்து, பரப்பும் ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்கள், அரசியல் கட்சிகள், குழுக்கள் மற்றும் அமைப்புகள் மீது டிபிடிபி சட்டம் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும், ஏனெனில் தவறு இழைப்பவர்கள், இச்சட்டத்தின் கீழ் சந்தேகிக்கப்பட முடியாத 'நம்பிக்கையானவர்களாக' மாறுவார்கள்.

ஒன்றிய அரசு தனது அதிகாரத்தை மையப்படுத்தி உருவாக்கும் தரவுபாதுகாப்பு

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்

## பாசிச எதிர்ப்பு கருத்தரங்கில் பங்கேற்க முதலமைச்சருக்கு அழைப்பு




இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் 100வது ஆண்டுவிழாவை முன்னிட்டு கேரளத்தில் நடைபெறும் பாசிச எதிர்ப்பு கருத்தரங்கில் பங்கேற்க வருமாறு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அழைக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில செயலாளர் பினாய் விஸ்வம் 20.4.2025 அன்று நேரில் சந்தித்தார்.

அவருடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு செயலாளர் இரா. முத்தரசன், கேரள வருவாய் அமைச்சர் கே.ராஜன், இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில பொருளாளர் எம் ஆறுமுகம், நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், தளி சட்டமன்ற உறுப்பினர் டி. ராமச்சந்திரன் மற்றும் பிற தோழர்களும் கலந்து கொண்டனர்.

கட்சிக் கடிதம்



## மக்களைப் பிளவுபடுத்துதல் மடமை

# தீவிரவாதத்தை ஒருபோதும் அனுமதியோம்

போர்க்குணமிக்க தோழர்களே!

**நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய சம்பவம் கடந்த ஏப்ரல் 22ல் நடைபெற்றுள்ளது.**

கோடை காலம் துவங்கிவிட்ட நிலையில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மட்டுமல்ல, குழந்தைகள், பெண்கள், பெரியவர்கள் எனப் பலரும் சுற்றுலா தளங்களுக்குச் சென்று சில நாட்கள் ஓய்வெடுப்பதும், சுற்றிப் பார்ப்பதும், அதன் மூலம் மகிழ்ச்சி அடைவதும் தொடர்ந்து நடைபெற்று வருவதுதான்.

மிக அழகான மாநிலம் காஷ்மீர். அம்மாநிலத்தில் உள்ள பஹல்காம் பகுதி சிறந்ததொரு சுற்றுலா தலமாகும்.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அங்கு செல்வது, சுற்றிப் பார்ப்பது வாடிக்கையான ஒன்றுதான்.

அவ்வாறே சென்ற பொதுமக்கள் மீது, வன்முறைக் கூட்டம் ஒன்று மிருகத்தனமான தாக்குதலை, கோழைத்தனமான முறையில் அரங்கேற்றி உள்ளனர்.

மனித குலம் நாகரிகத்தின் உச்சத்திற்குச் சென்று கொண்டுள்ள நிலையில், மிக அநாகரிகமான நிலையில், கீழ்த்தனமான தாக்குதலை நடத்தி உள்ளனர்.

அவர்கள் நடத்திய தாக்குதல் அப்பாவி மக்கள் மீது, யார் மீதும் பழி சுமத்தாத மக்கள், தங்களின் ஓய்வுக்காக, தங்களின் குடும்ப உறுப்பினர்களின் மகிழ்ச்சிக்காக, தங்களின் குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக சுற்றுலா வந்தார்கள்.

இவர்களின் சுற்றுப் பயணம் யாருக்கும் எதிரானது அல்ல, எவர் மீதும் பழி போட அல்ல, யாரையும் துன்புறுத்த அல்ல, அப்பாவிகள், எதுவும் அறியாப் பச்சிளம் குழந்தைகளோடு சுற்றுலா வந்தவர்கள்.

இவர்களின் மீது நடந்திட்ட வெறித்தனமான தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பலர் படுகாயமுற்றுள்ளனர். இவர்களின் மீது ஏன் தாக்குதல் நடத்திட வேண்டும்? அப்பாவி மக்களைக் கொல்வதால், அவர்களின் ரத்தத்தைக் குடிப்பதால் தீவிரவாதிகளுக்கு என்ன பயன்?

கணவனை இழந்த பெண்கள், தந்தையை இழந்த குழந்தைகள் எனத் துயரம் நாட்டையே அதிரச் செய்துள்ளது.

நாட்டில் உள்ள 140 கோடி மக்கள் மதம், சாதி, அரசியல், கடவுள் என அனைத்தையும் மறந்து, ஒட்டுமொத்த மக்கள் அனைவரும் பலியான சகோதர, சகோதரிகளுக்கு நாள்தோறும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அனைத்து மக்களும் ஒன்றுபட்டு வன்முறைக்கு எதிராக, தங்களின் கடும் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளனர்.

ஒன்றிய அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும், தங்களின் முழு ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

நடந்த சம்பவம் மிக, மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை.

நாட்டின் எல்லைப் பகுதியில், குறிப்பாக காஷ்மீர் பகுதியில், எந்த நேரத்திலும் தீவிரவாதக் குழுக்களால் தாக்குதல் நடைபெறக் கூடும் என்கிற ஐயப்பாடு தொடர்ந்து உள்ளது என்பதை எவரும் மறுக்க இயலாது.

இப்படிப்பட்ட சூழலில் ஒன்றிய அரசும், அதன் நிர்வாக அமைப்புகளும் கவனமுடன் இருக்க வேண்டாமா? என்கிற நியாயமான கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டிய பொறுப்பு ஒன்றிய அரசுக்கு உள்ளது என்பதனை புறந்தள்ளிவிட முடியாது.

கவனக்குறைவும், அலட்சியப் போக்கும் அல்லது தன்னை மிஞ்சுபவர் எவரும் இல்லை என்கின்ற தலைச்செறுக்கும் நிலவிய நிலையில், இன்று நம் நாடு சோகத்தில் ஆழ்ந்துள்ளது என்பதைப் புறந்தள்ளிவிடலாகாது.

லஸ்கர் இ தொய்பா ஆதரவு அமைப்பான டி.ஆர்.எப் என்கிற தீவிரவாத அமைப்பு தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளது.

இந்நிலையில் தாக்குதலுக்குக் காரணமான நபர்கள், அவர்களின் அமைப்புகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர்கள் கண்டறியப்பட வேண்டும். கைது செய்யப்பட வேண்டும். மிகக் கடுமையான முறையில் தண்டிக்கப்பட வேண்டும்.

இதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு முனைப்போடு மேற்கொள்ள வேண்டியது அதன் கடமையாகும்.

தாக்குதலை நடத்தியவர்கள் கண்டறியப்படுவதும், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்கின்ற குறிக்கோளுடன் செயல்படுவதைக் கைவிட்டுவிட்டு, இதனை தங்களுக்குரிய அரசியல் ஆதாயம் தேடும் அற்பத்தனமான செயலில் பாஜகவினர் ஈடுபட்டு வருவது மிகுந்த கவலைக்குரியது.

நாட்டு மக்களின் அப்பழுக்கற்ற தேசபக்தியை, தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள முற்படுவது, நாட்டு மக்களின் தேசபக்தியை அவமதிக்கும் செயலாகும் என்பதனை ஒன்றிய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

தீவிரவாதிகள் சுற்றுலா பயணிகளிடம் என்ன மதம் எனக் கேட்டு, இந்துக்களைப் பார்த்து குறி வைத்துச் சுட்டனர் என்று பரப்புரையை மேற்கொள்வது அநாகரிகமானது.

சுற்றுலாப் பயணிகளைக் குதிரையில் ஏற்றிச் சவாரி செய்து, அதன் மூலம் கிடைக்கும் சொற்பத் தொகையைக் கொண்டு குடும்பம் நடத்தும் ஒரு இஸ்லாமியர், தீவிரவாதி துப்பாக்கியால் சுடுவதைக் கண்டு பொறுத்துக்கொள்ள முடியாமல், அவனோடு சண்டையிட்டு, துப்பாக்கியைப் பறிக்க முயன்ற போது, அந்த இஸ்லாமியத் தொழிலாளி, தீவிரவாதியால் சுடப்பட்டு இறந்து போனார் என்கிற செய்தியும் பார்க்கத் தவறக் கூடாது.

ஒன்றிய அரசு சில அவசரமான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

குறிப்பாக,

- சிந்து நதியில் இருந்து பாகிஸ்தானுக்குச் செல்லும் நீரை தற்காலிகமாக நிறுத்தி வைத்தது.
- பாகிஸ்தான் தூதருக்கு நோட்டீஸ் அனுப்பியது.
- இந்தியாவில் உள்ள அனைத்து பாகிஸ்தானிர்களும் 48 மணி நேரத்தில், நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என உத்தரவிட்டது.
- எல்லையில் இந்திய ராணுவத்தைக் குவித்தது.

இதற்குப் பதிலடியாக பாகிஸ்தான் அரசு, இந்தியா பாகிஸ்தான் ஒப்பந்தமான (1971) சிம்லா ஒப்பந்தத்தை ரத்து செய்துள்ளது.

பாகிஸ்தானில் உள்ள இந்தியத் தூதருக்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

பாகிஸ்தானில் உள்ள இந்தியர்கள் அனைவரும், 48 மணி நேரத்தில் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் ராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

இருநாட்டுராணுவத்தினரும்துப்பாக்கித்தோட்டாக்களை வெடிக்கும் சப்தம் கேட்பது கவலைக்குரியது.

இந்தியாபாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கு இடையே மீண்டும் போர் வருமோ! என்கிற அச்சம் எழுந்துள்ளது.

போரைத் துவங்குவது மிக எளிது. நொடிப் பொழுதில் போரைத் தொடங்கி விடலாம்.

தொடங்குவது பாகிஸ்தானா? அல்லது இந்தியாவா? எந்த நாடு வேண்டுமானாலும் தொடங்கலாம்.

அவ்வாறு போர் தொடங்கப்பட்டால், அது எப்போது நிற்கும். அதனை எவராலும் தீர்மானிக்க முடியாது!

ரஷ்யா, உக்ரைன் போர் தொடங்கி ஓராண்டைக் கடந்து விட்டது. இன்னும் முடியவில்லை.

இஸ்ரேல், பாலஸ்தீனம் மக்கள் மீது தொடுக்கப்பட்ட போர் முடியவில்லை.



போர்களை முடிவிற்குக் கொண்டு வருவதில், அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகள் ஒருபோதும் விரும்புவதில்லை. இரு பக்கமும் கூர் தீட்டி, போரை மேலும் மேலும் தீவிரப்படுத்தவே விரும்புகின்றன.

உலகின் எங்கேனும் ஒரு பக்கத்தில் போர் நடைபெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் ஏகாதிபத்திய நாடுகள் தங்கள் நாட்டில் உற்பத்தியாகும் ஆயுதத் தளவாடங்களை விற்பனை செய்து கொள்ளை லாபம் அடித்துத் தங்கள் செல்வத்தைப் பன்மடங்காகப் பெருக்கிக் கொள்ள முடியும் என்பதில் ஏகாதிபத்திய நாடுகள் உறுதியாக உள்ளன.

இந்தியா ராணுவ பலத்திலும், ஆயுத பலத்திலும் மிக பலமாக உள்ளது என்பது நமக்குப் பெருமை அளிப்பதாகும்.

அதே போன்றுதான் பாகிஸ்தானும் வலிமையாக உள்ளது என்பதை நாம் குறைத்து மதிப்பிடலாகாது.

இரு நாடுகளுமே அணு ஆயுத வலிமை பெற்ற நாடுகளாகும் என்பதனை உலகறியும்!

போரற்ற உலகம் வேண்டும். அதுவே உலகம் முழுவதிலும் உள்ள மக்களின் விருப்பமாகும்!

தீவிரவாதம் எத்திசையில் இருந்து, யாரால் வந்தாலும், அதனை ஒருபோதும் அனுமதியோம்!

தீவிரவாதத்தைக் காரணம் காட்டி, மதத்தின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்துவதையும் அனுமதியோம்.

மீண்டும் சந்திப்போம்,

வணக்கம்,

**தோழமைமிக்க,**

**(இரா.முத்தரசன்)**

**மாநிலச் செயலாளர்**

# சண்டிகரில் 25வது கட்சிப் பேராயம் எப்படி நடைபெறுகிறது?

## பஞ்சாப் மாநிலச் செயலாளர் பந்த்சிங் பிரார் விளக்கம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது கட்சிப் பேராயம் சண்டிகர் நகரத்தில், செப்டம்பர் 21 முதல் 25 வரை நடைபெற இருக்கிறது.

திருவனந்தபுரத்தில் நடந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழு கூட்டத்தில், இந்த மாநாட்டை நடத்துவதற்காக எடுக்கப்பட்டு வரும் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பஞ்சாப் மாநில செயலாளர் பந்த்சிங் பிரார் விவரித்தார்.



"கட்சிப் பேராயத்தை நடத்துவதற்கு தெலுங்கானா மாநிலம் தயாராக இருந்த போதும் கூட, இந்த முறை இந்தியாவின் வட பகுதியில் நடைபெற வேண்டும் என வலியுறுத்தப்பட்டதால் நாங்கள் அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டோம்.

பெரும் தயக்கம் எங்களுக்கு இருந்தது. கேரளா, தெலுங்கானா, தமிழ்நாடு மாநிலங்களைப் போல பஞ்சாப்பில் எங்கள் கட்சி பலமாக இல்லை. சென்ற மாநாடு விஜயவாடாவில் நடைபெற்ற போது அது பெரும் திருவிழா போல அமைந்தது. அதே அளவுக்கு எங்களால் நடத்த முடியுமா? என்பதே தயக்கத்துக்குக் காரணம்.

ஆனால் இது குறித்து எங்களது மாநிலக் குழுவில் பேசிய போது, நன்றாக நடத்தி விடலாம் என்று தோழர்கள் உற்சாகத்தோடு சொன்னார்கள். சொன்னது மட்டுமல்ல, உடனடியாக செயலிலும் இறங்கினார்கள்.

காலிஸ்தான் தீவிரவாதத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிதான் உறுதியோடு எதிர்த்துப் போராடியது. இடதுசாரி இயக்கங்கள் தீவிரவாதத்தை எதிர்த்து பெரும் தியாகங்களை செய்து கொண்டிருந்தபோது, காங்கிரஸ் பிஜேபி அகாலி உள்ளிட்ட எந்த பூர்ஷுவா அமைப்பும் களத்தில் நின்று போராட முன் வரவில்லை. கட்சியின் மூத்த தலைவரான தர்ஷன்சிங் கனடியன் உட்பட கட்சியின் முக்கியமான தலைவர்கள் பலர் கொல்லப்பட்டார்கள்.

கட்சி உறுப்பினர்களும் அவர்களது குடும்பங்களுமாக 3200 கம்யூனிஸ்டுகள் கொல்லப்பட்டார்கள்.

பெற்றோரை இழந்து தவித்த குழந்தைகளை பராமரித்துப் படிக்க வைக்க கட்சி மிகப்பெரிய முயற்சியை மேற்கொண்டது. தோழர்கள் சத்யபால் டாங், விமலா டாங் போன்றவர்கள் பெரும் பங்களிப்பு செய்தவர்கள். அன்று குழந்தைகளாக இருந்தவர்கள் எல்லாம் இப்போது வளர்ந்து பெரியவர்களாக இருக்கிறார்கள்.

அவர்களை அழைத்து அவர்களது பெற்றோர்களின் தியாகங்களை கௌரவிக்கவும் வேண்டும், நன்கொடையும் பெற வேண்டும் என்ற கருத்து முன் வைக்கப்பட்டது.

இதனை முதலில் தெரிவித்தவர், தேசிய குழு உறுப்பினராக உள்ள நரிந்தர் சோகல். அவரது பெற்றோர்கள் காலிஸ்தானி தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட போது, நான்கு வயது குழந்தையாக இருந்த அவரது கால்களிலும் இரண்டு குண்டுகள் பாய்ந்தன. இப்போதும் அந்தக் குண்டுகள் உடலில் இருந்து நீக்கப்படாத நிலையிலேயே அவர் வாழ்ந்து வருகிறார்.

(குழந்தையாக இருந்த நரிந்தர் சோகல், கட்சியால் தத்தெடுத்துக் கொள்ளப்பட்டார். கட்சி தனது பொறுப்பில் வளர்த்து படிக்க வைத்தது. அவர் மாணவர் பெருமன்றத்தின் மாநில செயலாளராகவும், இளைஞர் பெருமன்றத்தின் மாநில நிர்வாகியாகவும் பணியாற்றி இருக்கிறார். இப்போது கட்சியின் தேசியக் குழு உறுப்பினராக உள்ளார். திருவனந்தபுரம் கூட்டத்தில் அவரும் கலந்து கொண்டார்).

அந்தக் குடும்பங்கள் அக மகிழ்வோடு வரவேற்று 10 லட்சம் ரூபாய்க்கு அதிகமாக வசூலித்து தருவதாக உறுதியளித்தனர்.

தொலைபேசி தொழிற்சங்க இயக்கத்தைச் சார்ந்த தோழர் ஸ்வதந்தர் குமார், புற்றுநோய் முற்றிய நிலையில், தனது மரணப் படுக்கையில் இருக்கிறார். "இது எனது கட்சி. அகில இந்திய மாநாட்டை நடத்தும் பெரும் கௌரவம் அதற்கு தரப்பட்டிருக்கிறது. எனது பங்கை நிறைவேற்றுவேன்" என்று கூறி, சங்க உறுப்பினர்களை தொலைபேசியிலேயே அழைத்துப் பேசி ஐந்து லட்சம் ரூபாய் வசூலித்துக் கொடுத்துள்ளார்.

இதைச் சொல்லும் போதே பிராரின் கண்கள் கலங்கின. உணர்வு மேலீட்டால் நாக்கு தழுதழுத்தது. இரும்பு போல் உறுதியான, ஆறு அடிக்கு மேல் உயரம் கொண்ட அந்தத் தோழர் கண் கலங்கியது கட்சி வாழ்க்கையின் உன்னதத்தை உணர்த்தியது.

"மின்சாரத் தொழிலாளர்கள், குடிநீர் வாரிய தொழிலாளர்கள், பஞ்சாப் மாநில போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள், சாலை போக்குவரத்து மற்றும் அரசுப் பணியில் இருப்பவர்கள், அரசு அமைப்பு சாரா தொழிலாளர்கள் என ஒரு மாதத்துக்கும் குறுகிய காலத்திலேயே 40 லட்சம் ரூபாய் வசூலித்து ஒப்படைத்து இருக்கிறார்கள்.

மாநாட்டு நிதிக்காக எந்த பூர்ஷுவா கட்சித் தலைவர்களிடமும், பெருமுதலாளிகளிடமும் நிதி வசூலிப்பதில்லை என்று நாங்கள் முடிவு செய்து இருக்கிறோம்.

800 பிரதிநிதிகள் வரை வருவார்கள். 2 கோடி ரூபாயாவது தேவைப்படும். அதனை எமது உறுப்பினர்கள், குடும்பங்கள், அனுதாபிகளிடமிருந்தே வசூலித்து முடிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு இறங்கி இருக்கிறோம்.

கட்சியின் நிறுவனர்களான சோகன்சிங் பாக்னா, சோகன்சிங் ஜோஸ் ஆகியோரது நினைவிடங்களில் இருந்தும், பிரிட்டிஷ் ராணுவம் படுகொலை நடத்திய ஜாலியன் வாலாபாக்கில் இருந்தும், பகத்சிங், சுகதேவ் ராஜகுரு நினைவிடம் அமைந்துள்ள, இந்திய பாகிஸ்தான் எல்லைக்கு அருகில் உள்ள ஹுசைனி வாலாபாக்கிலிருந்தும், ஐந்து தியாக ஜோதிகள் மாநாட்டுக்கு எடுத்துவரப்படுகின்றன.

வரவேற்புக் குழுவின் தலைவராக, மேகாலயா மாநிலத்தின் முன்னாள் டிஜிபியாக இருந்த ஐபிஎஸ் அதிகாரியும், முன்னாள் உள்துறை அமைச்சரான இந்திரஜித் குப்தா அவர்களின் தனிச்செயலாளராக பணிபுரிந்தவரும், சாகித்திய அகாதமி விருது பெற்ற எழுத்தாளருமான ஸ்வராஜ்பீர் சிங், வரவேற்புக் குழுவின் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் ஓய்வுக்கு பின் புகழ் பெற்ற பஞ்சாப் ட்ரிப்யூன் பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றினார். பிஜேபி ஆட்சிக்கு வந்த பிறகு, மோடிக்கு ஆதரவாக பத்திரிகைகள் எழுத வேண்டும் என்று அழுத்தம் தரப்பட்டதால், பதவி விலகினார்.




◆ சண்டிகரில் நடக்க இருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது பேராயத்தின் சின்னம்.



◆ வரவேற்புக் குழு தலைவர், முன்னாள் டிஜிபி ஸ்வராஜ் பீர் சிங்



◆ நான்கு வயது குழந்தையாக இருந்த போதே காலிஸ்தானி தீவிரவாதிகள் சுட்ட துப்பாக்கி குண்டுகளை இப்போதும் உடலில் தாங்கி இயங்குகிற, தேசிய குழு உறுப்பினர் நரிந்தர் சோகல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்புக் குழு உறுப்பினர்களாகவும், பந்த் சிங் பிரார் செயலாளராகவும் பணியாற்றுகின்றனர்.

இந்தியா முழுவதிலும் இருந்து, மாநில மாநாடுகளில் தேர்வு செய்யப்பட்ட பேராயத்திற்கான பிரதிநிதிகளை வரவேற்க பஞ்சாப் தயாராக இருக்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க அகில இந்திய மாநாட்டை நாம் ஒன்றிணைந்து வெற்றி பெறச் செய்வோம்" என்று பந்த் சிங் பிரார் பேசினார்.

டி.எம்.மூர்த்தி

# கிராம உதவியாளர்களுக்குக் காலமுறை ஊதியம்

## பேரவையில் க.மாரிமுத்து எம்எல்ஏ வலியுறுத்தல்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கே.மாரிமுத்து எம்எல்ஏ பேசியதாவது:



**க.மாரிமுத்து எம்எல்ஏ:** திருத்துறைப்பூண்டி தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** நம்முடைய கள்ளிக்குடி கிராமத்தில் புதிதாக கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி கருத்துரு அனுப்பச் சொல்லியிருக்கிறோம். கூடிய விரைவிலே தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**கே.மாரிமுத்து எம்எல்ஏ:** தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறையில் சுமார் 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம உதவியாளர்கள் பணிபுரிகிறார்கள். வருவாய்த் துறையில் பணியாற்றுகிற அனைவருக்குமே வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் இருக்கிறது. ஆனால், கிராம உதவியாளர்களுக்கு மட்டும் சிறப்புக் காலமுறை ஊதியம் இருக்கிறது. இப்படி வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் இல்லாத காரணத்தாலேயே கிராம உதவியாளர்களுக்கு 23 ஆண்டு காலமாக வழங்கி வந்திருக்கிற கருணை அடிப்படையிலான வாரிசுகளுக்கான வேலைகளும் இன்றைக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம உதவியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியத்தின்கீழ் அவர்களையும் கொண்டுவருவார்களா?

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** இவர்களை முதலில் பணிநியமனம் செய்யும்போதே சிறப்பு கால முறையிலேதான் நியமித்திருக்கிறார்கள். இது நம்முடைய வருவாய்த் துறையில் மட்டுமல்ல. இதுபோன்று இன்னும் நான்கு, ஐந்து துறைகளில் இதேபோல சிறப்பு கால வரைமுறை ஊதியத்திலே பணியாற்றியவர்கள் இருக்கிறார்கள். வருவாய்த் துறையிலே மட்டும் இது முடிவெடுக்க முடியுமென்று சொன்னால் நாங்கள் உடனடியாகச் செய்யமுடியும். இது ஒரு நான்கு, ஐந்து துறைகளில் சேர்ந்து செய்ய வேண்டிய பணியாக இருக்கிறது. உரிய காலத்தில் இந்த அரசு செய்யும்.

யாருக்கும் நன்மை செய்ய வேண்டுமென்று நினைக்கக்கூடிய அரசாங்கம் இவர்களுக்கும், வருவாய்த் துறையிலே அடிப்படையிலே கீழே இருக்கிற பணியாளர்கள் இவர்கள்தான். இவர்களுக்கு வேண்டிய அந்த உதவியைச் செய்வதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

இதுவரைக்கும் கிராம உதவியாளர்கள் இறந்துபோனால் அவர்கள் வாரிசுகளுக்கு வேலை கிடையாது. ஆனால் இப்பொழுது பத்து நாட்களுக்கு முன்பு ஒரு உத்தரவு போட்டிருக்கிறோம். கிராம உதவியாளர்கள் பணியிலே இருக்கும்போது இறந்துபோனார்கள் என்று சொன்னால் அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை என்று சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, அந்த உத்தரவையும் வழங்கியிருக்கிறோம்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 05

## யாருக்காகப் போர்?

காஷ்மீரின் பஹல்காமில், ஏப்ரல் 22ல் நடைபெற்ற சுற்றுலாப் பயணிகள் மீதான தாக்குதல் நடந்து ஒரு வாரமாகிவிட்டது.

இந்தத் தாக்குதல் கொடூரமானது, மனிதநேயமற்றது, அமைதியைச் சீர் குலைக்கும் சூழ்ச்சி கொண்டது, பெரும் கண்டனத்திற்குரியது.

இந்தியா பாகிஸ்தான் இடையே ஏற்பட்டுள்ள உறவு சீர்கேட்டில், எந்தத் தொடர்பும் இல்லாத அப்பாவி இந்தியர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

சமூக ஊடகங்கள் பல உண்மைகளை வெளிக் கொண்டு வந்தன. தாக்குதலுக்குப் பின்பு உயிரற்ற உடல்களை உடற்கூறு செய்து பெற்று அனுப்புவதிலும், பரிதவித்து நின்ற பயணிகளுக்குத் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று உணவும் பாதுகாப்பும் தந்ததிலும், எந்தக் கடையிலும் ஆட்டோவிலும் வாகனங்களிலும் கட்டணம் வாங்க மறுத்ததிலும் காஷ்மீரின் இஸ்லாமியச் சகோதரர்களே, மகத்தான கடமையாற்றி இருக்கின்றனர். மனமார வணங்குகிறோம்.

ரூ.10,000 விமானக் கட்டணத்தை ரூ.60,000மாக உயர்த்தி முதலாளிகள் கொள்ளை லாப புத்தியைக் காண்பித்தார்கள்.

கேள்விகளும் உண்டு! அடிக்கு ஒரு ராணுவ வீரர் பாதுகாப்பு இருக்கும் இடத்தில், அன்று ஏன் யாருமில்லை? பாக். எல்லையில் இருந்து தீவிரவாதிகள் எப்படி 300 கி.மீ உள்ளே நுழைந்தார்கள்? கடும் காயம் ஏற்பட்டு ஒன்றரை மணி நேரமாகத் துடித்துக் கொண்டிருந்த ராணுவ உயர் அதிகாரியைக் காப்பாற்றுவதற்குக் கூட ஏன் ராணுவம் வரவில்லை? வெளிநாட்டில் இருந்து திரும்பிய மோடி, காஷ்மீருக்கு வராமல் ஏன் பீகார் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்று பழிக்குப் பழி வாங்கப் போவதாக தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசுகிறார்?

2008ல் நடந்த மும்பைத் தீவிரவாத தாக்குதலின் போது, அன்றைய பிரதமரும் உள்துறை அமைச்சரும் பதவி விலக வேண்டும் என்று பிஜேபி நாடெங்கும் போராட்டங்களை நடத்தியது. பிரதமருக்கு வளையலும் புடவைகளும் அனுப்பி வைத்தார்கள்.

இவ்வளவுக்கும் அந்தத் தாக்குதலுக்குப் பின் உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல் ராஜினாமா செய்தார். தீவிரவாதிகளை எதிர்த்து நம் படை போரிட்டது. பல வீரர்கள் இறந்தார்கள். அதிரடிப் படையின் தலைவர் ஹேமந்த் கர்கரே கொல்லப்பட்டார். தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர். அஜ்மல் கஸாப் உயிரோடு பிடிக்கப்பட்டான். விசாரணை நடத்தித் தூக்கிலிடப்பட்டான்!

ஊரி, கார்கில், புல்வாமா

அமர்நாத், பதான்கோட், அக்ஷர்தாம்,

சர்வ பாதுகாப்புக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தில் பிஜேபி எம்.பி.யின் பரிந்துரையோடு உள்ளே நுழைந்த தீவிரவாதிகளின் தாக்குதல், இப்போது பஹல்காம்! நாடாளுமன்றத் தாக்குதல் தவிர்த்த மற்ற தாக்குதல்களைப் பற்றி எந்தப் புள்ளிவிவரங்களும் குற்றம் இழைத்தவர் பெயர்களும் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை.

காவலாளியே குற்றவாளி, மோடியும் அமித் ஷாவும் பதவி விலக வேண்டுமென பிஜேபி தலைவர் சுப்பிரமணிய சுவாமியும் கூறுகிறார். ஆர்எஸ்எஸ், பிஜேபி என்றைக்கு நேரடி பதில் சொல்லி இருக்கிறது?

ஒன்றிய அமைச்சரான பியூஸ் கோயல், “140 கோடி மக்களும் அரசோடு சேர்ந்து நிற்காமல் கேள்விகள் கேட்பதால்தான், பாகிஸ்தான் நம் மீது தாக்குதல் தொடுக்கிறது” என்று இந்திய மக்கள் அனைவர் மீதும் நேரடியாகக் குற்றஞ்சாட்டுகிறார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில், போர் துவங்குவது போல எல்லையை நோக்கி இந்திய, பாகிஸ்தான் ராணுவங்கள் குவிக்கப்படுகின்றன.

எல்லை அருகே உள்ள பஞ்சாப் மாநில விவசாயிகளிடம், இன்னும் அறுவடைக்குத் தயாராகாத பயிர்களை 48 மணி நேரத்துக்குள் அறுத்து முடிக்க வேண்டும் என்று எல்லைப் பாதுகாப்புப் படை சொன்னதாகத் தெரிகிறது. அவசரமாக அறுவடை நடக்கிறது. கதிர் முற்றாத பயிரை எந்த முட்டாள் விவசாயியாவது அறுவடை செய்வானா?

இந்தப் பழி பாவத்தில் எந்தத் தொடர்பும் இல்லாத அப்பாவி பாகிஸ்தானியர்களை 48 மணி நேரத்துக்குள் இந்தியாவில் இருந்து வெளியேற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இங்கு திருமணம் செய்து 35 ஆண்டுகளாக வாழும் பெண், என் குடும்பம் இங்கிருக்கிறது பாகிஸ்தானில் யாரும் இல்லை, அங்கு எவ்வாறு வாழ்வேன் என்று கண்ணீர் விடுகிறார். மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்கள் அழுது துடிக்கிறார்கள்.

அந்த முரட்டுத் தீவிரவாதிகளுடன், மோடி அரசு ஒரே தட்டில் நிற்பது இந்தியாவின் ஆன்மாவைக் குலைக்கிறது.

இஸ்ரேல், அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகியவை ஒட்டியும் ஒட்டாமலும் பேசுகின்றன. உக்ரைன் போர் முடிந்து விட்டால் ஆயுதங்களை விற்பதற்கு அவர்களுக்கு இன்னொரு சந்தை வேண்டாமா?!

நூற்று நாற்பது கோடி மக்களின் வாழ்க்கை ஒன்றிய அரசின் கைகளில் உள்ளது.

### எல்லை தாண்டிய பயங்கரவாதம் உள்ளூர்த் தீவிரவாதம்

# ஒன்றிய அரசே தார்மீகப் பொறுப்பு!



மு.வீரபாண்டியன்

**காஷ்மீரில் சுற்றுலா தளமான பகல்ஹாமில், பாகிஸ்தான் எல்லையோரம் இயங்கும் பயங்கரவாதிகள், ஏதுமறியாத அப்பாவி பொதுமக்களைச் சுட்டுக் கொன்றனர். இது உலகம் முழுவதும் அதிர்ச்சியை உருவாக்கியது. உலகம் முழுவதும் கண்டனம் எழுந்தது.**

நாடு கடந்த பயங்கரவாதத்தை எதன் பொருட்டும் ஏற்க இயலாது. நாடே ஒன்றுபட்டு அதனை எதிர்க்க வேண்டும்.

நாட்டில் ஏற்க இயலாத நிகழ்வுகள் ஏற்படும் போது, அதனை இந்து முஸ்லிம் பிரச்சனை போல் திசைத்திருப்பும் முயற்சிகளை முறியடிக்க வேண்டும்.

பகல்காமில் எந்தச் சூழலிலும் இந்துக்களும், முஸ்லிம்களும் சகோதரத்துடன் வாழ்வோம் என்பது ஓர் இஸ்லாமிய குதிரையோட்டின் மூலமும், இன்னும் பிற சுற்றுலாப் பணியாட்கள் மூலமும் நிரூபணமாகிவிட்டது.

நாட்டில் பயங்கரவாதச் செயல்கள் நிகழும் போது, நாட்டின் உளவுத்துறை மீதும், எல்லையோரப் பாதுகாப்புக் கட்டமைப்பின் மீதும் கேள்வி எழுவது இயல்பு. இதற்கு தார்மீக பொறுப்பு அரசுதான்.

பாகிஸ்தான் அரசுடன், இந்திய அரசுக்கு நல்லுறவு இல்லை. இச்சூழலில் சிந்து நதிநீர் நிறுத்தம், பாகிஸ்தானியர் வெளியேற்றம், தூதரக அதிகாரிகள் வெளியேற்றம் என்பது அரசின் பொறுப்பை உணர்த்தவில்லை.

இதில் கூட குஜராத் முதலாளிகளின், பாகிஸ்தான் வர்த்தகம் பாதித்துவிடக் கூடாது என்பது தெரிகிறது.

பாகிஸ்தான் இந்தியப் பிரச்சனைக்கு ராணுவம்தான் தீர்வு என்பது போன்ற நடவடிக்கைகள், இன்னும் பகைமையும், வெறுப்பும் சூழவே வழி வகுக்கும்.

பாகிஸ்தான் எல்லையோரம் செயல்படும் பயங்கரவாத முகாம்களை, பாகிஸ்தான் அரசும் தனது நடவடிக்கைகளால் ஒடுக்க வேண்டும். சில பயங்கரவாதக் குழுக்களால் பாகிஸ்தான் அரசும் பாதிப்படுவதை உணர வேண்டும்.

இந்தியாபாகிஸ்தான் இரு நாடுகளும் அரசியல் பேச்சுவார்த்தைகளைத் துவக்கி, எல்லையோர எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு முடிவு கட்ட வேண்டும்.

அதே நேரத்தில், ஆயுதம் தாங்கிய குழுக்கள் அனைத்தையும் பயங்கரவாதக் குழுக்கள் என்ற முடிவிற்கும் வர முடியாது.

பாலஸ்தீன விடுதலைக்குப் போராடும் ஹமாசும், பாகிஸ்தான் எல்லையோர ஆயுதக் குழுக்களும் ஒன்றல்ல. பாகிஸ்தான் எல்லையோர ஆயுதக் குழுக்கள் எந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடுகிறது?

எல்லைப் பிரச்சினைக்கு ஆயுதம் தீர்வல்ல! போர் தீர்வு அல்ல! அரசியல் பேச்சுவார்த்தைகள்தான் தீர்வு!

ஒரு நாட்டில் எல்லை தாண்டிய பயங்கரவாதம் நிகழும் போது, அதனை அரசு பயங்கரவாதம் கண்டிக்க எந்தத் தார்மீகமும் இல்லை.

மருத்துவமனையின் மீதும், அகதி முகாம்கள் மீதும் வான்வழித் தாக்குதல் நடத்தி, அப்பாவி பொதுமக்களைக் கொன்று குவிக்கும் இஸ்ரேலும், அதற்குத் துணை போகும் அமெரிக்கா போன்ற நாடுகளும் பயங்கரவாதத்தைக் கண்டிக்க தார்மீகம் உண்டா? கடந்த நூற்றாண்டுகளில் உலகம் இதுவரை கண்டிராத அரச பயங்கரவாதம் என்பது “மயிலாயி” தான்.

வியட்நாமின் மிகச் சிறிய அழகிய கிராமம் அது. வியட்நாமின் வீரம் செறிந்த, கொரில்லா போர் முறைகளை எதிர் கொள்ள முடியாமல், தோல்வியைச் சந்தித்த அமெரிக்க ராணுவம், மயிலாயி கிராமத்து மக்களை ஒட்டுமொத்தமாகச் சுட்டுக் கொன்றது. உலகமே அதிர்ந்தது.

பின்லேடன், சீக்கிய தீவிரவாதிகள் உலகம் முழுவதும் தீவிரவாத குழுக்கள் எனத் தொடர்புகள் கொண்டவர்கள் யார்?

வரலாறு எதையும் மறைக்காது, மன்னிக்காது.

ஒன்றிய அரசு “நக்சலைட்” குழுக்களை, பயங்கரவாத குழுக்களாக, அதிலும் இடது பயங்கரவாத குழுக்களாக அறிவித்து நரைவேட்டை ஆடுகிறது.


நமக்கு நக்சலைட் வழிமுறைகள் ஏற்கத்தக்கதல்ல, அவர்கள் ஆயுதங்களைத் தவிர்த்து, ஜனநாயக பாதைக்குத் திரும்புவது நல்லது.

மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட், சிபிஐ எம்.எல் அப்படித் திரும்பியது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாட்டில், தோழர் தீபங்கர் பட்டாச்சார்யா பின்வருமாறு கூறினார். “நாங்கள் எங்கள் சொந்த அனுபவத்தின் மூலமும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற அரசியல் கட்சிகளின் தோழமை அழுத்தங்களாலும் ஜனநாயக பாதைக்குத் திரும்பினோம். இதில் தோழர் ஏ.பி.பரதன் அவர்களின் பங்கு சிறப்பானது” என்றார்.

ஆளும் அரசு ஒன்றை ஆழமாக உணர வேண்டும்.

உள்ளூர் நக்சல் குழுக்கள்.



எளியமக்களின் கோரிக்கைகளால் உருவாகிறது. அவர்கள் நிலங்கள் பறிக்கப்படுகின்றன.

“சால்வா ஜுடும்“ போன்ற நிலப்பிரப்புகளின் படுகொலைச் செயல்களால் உருவாகிறது.

அரசு அதிகாரிகளின் அலட்சியம், ஆட்சியாளர்களின் பொய்களால், தவறான கொள்கைகளால், உள்ளூர்த் தீவிரவாதம் பிறப்பெடுக்கிறது.

உள்ளூர்த் தீவிரவாதம் “கோரிக்கை மொழி”, அதனை “தீர்வு மொழியால்” வெல்லும் கொள்கை அரசுக்கு உண்டா?

சொந்த மண்ணில் பிறந்து, வளர்ந்த மிக, மிக எளிய மக்கள்தான் ஆயுதம் ஏந்துகிறார்கள்.

அவர்கள் கோருவது குடிதண்ணீர், நிலம், வேலை, மருத்துவமனைகள், கல்வி.

அரசு தரும் புள்ளி விவரப்படி பல நூறு கிராமங்களுக்கு அரசு அதிகாரிகள் செல்வதே இல்லை.

திட்ட நிதிகள் களவாடப்படுகிறது. திட்டங்கள் ஆதிக்க சக்திகளால் தடுக்கப்படுகிறது.

நில பிரபுக்களின் ஆயுதப் படைகள் இன்னும் இயங்கும் போது, நக்சலிசம் எப்படி ஒழியும்.

நக்சல் பாதை சரியல்ல என்றாலும், கோரிக்கைகள் சரிதானே?

ஆதனை ஒடுக்க முடியுமா என்ன?

- **போர்களின் வெடிச் சத்ததில் மானுடத்தின் அழுகுரல் கேட்காது.**
- **நாடுகளின் இடையே எழும் மோதலை, முரண்களை, போர்களாக்கும் முதலாளித்துவம், போர்களால் ஆயுதச் சந்தை உற்சாகமடையும், அதாவது முதலாளிகள்! மக்களோ அச்சத்தில்! துயரில்!!**
- **போர்களுக்கு எதிராக பாட்டாளி வர்க்கம்தான் முதல் குரல் எழுப்ப வேண்டும். இரண்டாம் உலக யுத்தத்தில் ஜெர்மன் தொழிலாளர் வர்க்கம் யுத்தத்திற்கு எதிராக, பல மாதங்கள் வேலை நிறுத்தம் செய்தது.**

பாட்டாளி வர்க்க ரஷ்யாவைப் பாதுகாப்போம் என்று அது குரல் எழுப்பியது.

தேசியத்தையும் தாண்டிய சர்வதேசிய குரல் அது.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு தீர்மானம் முதல் பக்க தொடர்ச்சி

வாரியம், தகவல் கோருபவர்களைத் தவறு இழைத்தவர்களாகக் கருதினால், அவர்களுக்கு ரூபாய் 250 கோடி வரை அபராதம் விதிக்கும் அதிகாரங்களைக் கொடுத்துள்ளது. எனவே, பொறுப்பு கூறல் பற்றிய தகவல்களைத் தேடுபவர்களுக்கு எதிரான ஆயுதமாக இந்தச் சட்டம் பயன்படுத்தப்படும் எனும் ஐயம் எழுந்துள்ளது. இது ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகிறது.

தகவல் உரிமைச் சட்டத்தைத் திருத்தி அழிக்கும் டிபிடிபி சட்டத்தின் பிரிவு 44(3) ஐ ரத்து செய்யுமாறும், டிபிடிபி சட்டத்தின் பிற சிக்கலான விதிகளை முறையாக மறுஆய்வு செய்யுமாறும் பிரதமரையும் சம்பந்தப்பட்ட அமைச்சரையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கேட்டுக்கொள்கிறது.

### வியட்நாம் மக்களின் புரட்சிகர உணர்வு நீடூழி வாழ்க.

சைகோன் விடுதலை மற்றும் வியட்நாம் மீண்டும் ஒன்றிணைக்கப்பட்டதன் 50வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வியட்நாம் மக்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்துகிறது.

சைகோன் விடுதலையின் 50வது ஆண்டு நிறைவையும், உங்கள் மகத்தான தேசத்தின் மறு இணைப்பையும் கொண்டாடும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில், வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வியட்நாம் வீரதீர மக்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு அன்பான புரட்சிகர வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் வரலாற்றில் ஒரு நினைவுச்சின்ன நாளாக ஏப்ரல் 30, 1975 கருதப்படுகிறது, இது அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் தெற்கில் உள்ள பொம்மை ஆட்சியின் மீது வியட்நாம் மக்கள் பெற்ற மகத்தான வெற்றியைக் குறிக்கிறது. இது வியட்நாம் மக்களுக்கு மட்டுமல்ல, உலகெங்கிலும் உள்ள தேசிய விடுதலை, இறையாண்மை மற்றும் சோசலிசத்திற்காகப் போராடும் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் கிடைத்த வெற்றியாகும்.

வியட்நாமிய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுதியான தலைமையின் கீழ், வியட்நாமிய மக்கள் மகத்தான துயரங்கள் மற்றும் ஆக்கிரமிப்புகளை எதிர்கொண்டு இணையற்ற துணிச்சல், ஒற்றுமை மற்றும் மீள்தன்மையை வெளிப்படுத்தினர். 1975 ஆம் ஆண்டு வெற்றி ஒரு தேசத்தின் உடைக்க முடியாத முயற்சி வெற்றி பெற்றே தீரும் என்பதற்கு ஒரு சான்றாகும்.

இவ்வாறு தோழர் ஹோ சி மின்னின் நீண்டகால கனவு நனவாகியது, நாட்டின் சுதந்திரத்திற்கான தளராத போராட்டம் வெற்றியில் உச்சத்தை அடைந்தது, ஒன்றுபட்ட மற்றும் இறையாண்மை கொண்ட வியட்நாம் என்ற அவரது தொலைநோக்கை நிறைவேற்றியது.

மீண்டும் ஒன்றிணைந்ததிலிருந்து ஐம்பது ஆண்டுகளில், வியட்நாம் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புதல், சோசலிசத்தை வலுப்படுத்துதல் மற்றும் அதன் புரட்சிகர மரபை நிலைநிறுத்துவதில் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியை முன்னேற்றுவதில் பெரும் முன்னேற்றங்களை அடைந்துள்ளது. இந்தச் சாதனைகளை நாங்கள் வணங்குகிறோம், மேலும் நீதியான, வளமான மற்றும் அமைதியான சோசலிச வியட்நாமைக் கட்டியெழுப்புவதற்கான உங்கள் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு எங்கள் ஒருமைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

இந்தியாவில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் வெகுஜன அமைப்புகளும் வியட்நாமை தங்கள் சொந்தப் போராட்டமாகக் கருதின. என் பெயரும் உன் பெயரும் வியட்நாம், வியட்நாம்! ஹோ ஹோ ஹோ சி மின்ஹ் நாங்கள் போராடுவோம், வெற்றி பெறுவோம்! போன்ற முழக்கங்களோடு போராட்டக் களத்தில் நின்றன. இந்த ஒற்றுமை காலனி அடிமைத்தனத்தை எதிர்த்த நமது பொதுவான பாரம்பரியத்தில்



தோழர் சி அச்சுத மேனன் சிலைக்கு மலர் தூவி அஞ்சலி

இருந்து வந்தது.

கடந்த காலத்தைப் போலவே, மார்க்சியம் லெனினிசம், ஹோ சி மின் சிந்தனை, ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஆகியவற்றின் பகிரப்பட்ட கொள்கைகளில் வேரூன்றிய நமது கட்சிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான நட்பு மற்றும் ஒத்துழைப்பின் பிணைப்புகளை ஆழப்படுத்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதிபூண்டுள்ளது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான நீடித்த நட்பு நீடூழி வாழ்க.

வியட்நாம் மக்களின் புரட்சிகர உணர்வு நீடூழி வாழ்க.

சோசலிசம் மற்றும் அமைதி நீடூழி வாழ்க.

### மணிப்பூர் அட்டூழியங்கள்

மணிப்பூரில், இரண்டு தேசிய நெடுஞ்சாலைகளிலும் சுதந்திரமான போக்குவரத்தை அனுமதிக்குமாறு மத்திய உள்துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். ஆனால், அதற்கு எதிராக, தனி நிர்வாகம் மற்றும் தனி குக்கி தாயகம் வழங்குவதற்கான கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை சாலைகளைத் திறக்க மாட்டோம் என்ற நிலைப்பாட்டை குக்கி இன ஆயுதக் குழுக்கள் எடுத்து வருகின்றன.

தேசிய நெடுஞ்சாலைகளை முற்றுகையிடுவது நாட்டின் அரசியலமைப்பு நடைமுறைக்கு எதிரானது. குடிமக்களின் சுதந்திரமான இயக்கத்தை மறுப்பது சட்டவிரோத நடைமுறையாகும்.

மணிப்பூர் மாநிலத்தின் இரண்டு உயிர்நாடிகளான நெடுஞ்சாலைகளை உடனடியாக மீண்டும் திறக்க அனைத்துச் சாத்தியமான அரசியலமைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு, குறிப்பாக உள்துறை அமைச்சரையும், பொதுவாக ஒன்றிய அரசையும் கோருகிறது.

### மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை திருத்துக!

சட்டமன்றம் நாடாளுமன்றங்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை உறுதிப்படுத்தும் நாரி சக்தி வந்தன் அதிநியச் சட்டத்தில் உடனடியாகத் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கூட்டம் வலியுறுத்துகிறது.

இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், கடுமையான குற்றச்சாட்டை ஒன்றிய அரசின் மீது வைத்ததைத் தொடர்ந்து மோடி அரசாங்கம் நாரி சக்தி வந்தன் அதிநியச் சட்டத்தை நிறைவேற்றியது.

இந்த மசோதாவைச் செயல்படுத்துவதற்கான இரண்டு அளவுகோல்களை அது நிர்ணயித்தது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தி, தொகுதி மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்பதே அந்த நிபந்தனைகளாகும்.

இந்த நிபந்தனைகள், மத்தியிலுள்ள ஆர்எஸ்எஸ் பிஜேபி அரசாங்கத்தின் பெண்களுக்கு எதிரான பாசிச மனநிலையைப் பிரதிபலிக்கிறது. மேலும் இது மாநிலச் சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றம் போன்ற உயர் முடிவெடுக்கும் அமைப்புகளில் இருந்து இந்தியப் பெண்களை விலக்கி வைப்பதற்கான ஒரு பாசிச நிகழ்ச்சி நிரலாகும்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, தொகுதி மறு சீரமைப்பு ஆகிய நிபந்தனைகளிலிருந்து விலக்கி, சட்டத்தில் அவசரத் திருத்தம் மேற்கொள்ளுமாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

### பயங்கரவாதத்தை ஒழிக்க உலகம் தழுவிய அரசியல் உத்தி அவசியம்!

பஹல்காமில் நடந்த துயரமான தாக்குதல், வெறுப்பு, அடிப்படைவாதம் மற்றும் மறைமுகப் போர்களைப் பயன்படுத்தி பயங்கரவாதத்தின் மூலம் இந்தியாவையும் உலகையும் சீர்குலைத்து பயத்தையும் பிரிவினையையும் பரப்ப முயற்சிப்பவர்களின் தீய நோக்கங்களை மீண்டும் அம்பலப்படுத்துகிறது. இது ஒரு நாட்டின் ஒரு பகுதி அல்லது அங்கு வாழும் மக்கள் மீதான தாக்குதல் மட்டுமல்ல. மக்களை ஒன்றிணைக்கும் அமைதி, சகவாழ்வு, மனிதநேயம் ஆகிய விழுமியங்களின் மீது கொடுக்கப்படும் தாக்குதலாகும்.

இந்தச் சூழலிலும், முழு தேசமும் ஒரு பெரிய இழப்பை சந்தித்த வருத்தத்தில் இருக்கும் நேரத்தில், மக்களைக் காப்பாற்றவும், பயங்கரவாதத்திற்கு எதிராக வலுவான உலகளாவியப் பொதுக் கருத்தை உருவாக்குவதில் முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

இந்தியாவின் பதில் உறுதியாகவும் அளவிடப்பட்டதாகவும் இருக்க வேண்டும். எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஆதரிக்கும் சக்திகள் மற்றும் நிறுவனங்களை முற்றிலுமாக தனிமைப்படுத்த நிலைத்த உத்தியும் மனிதாபிமான உறுதிப்பாடும் இருக்க வேண்டும். அத்தகைய பயங்கரவாதிகளை ஒடுக்கித் தனிமைப்படுத்த, உலக அரங்கில் அரசியல் உத்திகளும், நிதி மேலாண்மையும் ஒருங்கு திரட்டப்பட வேண்டும்.

இந்த அழிவு சக்திகள் எங்கிருந்தாலும், அவற்றைத் தனிமைப்படுத்தவும், பயங்கரவாத அச்சுறுத்தலிலிருந்து விடுபட்டு வாழ ஒவ்வொரு மனிதனின் உரிமையையும் நிலைநிறுத்தவும், ஒரு தேசம் என்ற வகையில் நாம் ஒற்றுமையாகவும், நிலைகுலையாமலும் நிற்கிறோம்.

அதே நேரத்தில், நிலைமையை மேலும் மோசமாக்குவதைத் தவிர்க்க, கிடைக்கக்கூடிய அனைத்து அரசியல் உத்திகளை, ராஜதந்திர நடவடிக்கைகளைப் பயன்படுத்துமாறு இந்திய அரசாங்கத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

இதுபோன்ற பயங்கரவாதத் தாக்குதல்களைக் கண்டிக்கும் அதே வேளையில், இந்தக் கொடிய நிகழ்வு, இந்தியச் சமூகத்தை மத ரீதியாக இரு கூறுகளாகப் பிளவுபடுத்தி விடக்கூடாது என்று இந்திய மக்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அழைப்பு விடுக்கிறது.

தமிழில்: டி.எம்.மூர்த்தி

## ஆளுநர் ஆர்.என்.ரவியைப் பதவி நீக்கம் செய்

அரசியலமைப்புச் சட்டப் பதவியை வகிக்கும் ஆளுநர், மோதல்களின் உச்சத்தை எட்டியுள்ளதோடு, அரசியலமைப்புச் சட்ட விழுமியங்களை அடிமட்டத்திற்குத் தகர்த்துள்ளார். தமிழக ஆளுநராகப் பதவியேற்றதிலிருந்து, அவர் எப்போதும் மாநில அரசுடன் மோதலில் ஈடுபட்டு வருகிறார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி 10 சட்டமன்ற மசோதாக்களை நிறுத்தி வைத்தது “சட்டவிரோதமானது” மற்றும் “தவறானது” என்று ஏப்ரல் 8, 2025 அன்று, உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா மற்றும் ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு, ஒருமனதாகத் தீர்ப்பளித்தது. இதன் மூலம், அரசியலமைப்பின் 200வது பிரிவின் கீழ் ஆளுநரின் அதிகாரங்களை அமர்வு தெளிவுபடுத்தியது. பிரிவு 142 இன் கீழ் உள்ள தனது விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி நிலுவையில் வைக்கப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதப்படும் என்று தீர்ப்பளித்தது.

இவற்றில், மாநிலப் பல்கலைக் கழகங்களுக்கு துணைவேந்தர்கள் எவ்வாறு நியமிக்கப்படவேண்டும் என்பதை வரையறுக்கும் மசோதாவும் உள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்குப் பிறகு தமிழ்நாடு முதலமைச்சர் கூட்டும் துணைவேந்தர்கள் கூட்டத்தைப் பாழ்படுத்தும் முயற்சியில், ஆர்.என்.ரவி 2025 ஏப்ரல் 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் ஊட்டியில் துணைவேந்தர்கள் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார். இதற்குக் குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் அழைக்கப்பட்டுள்ளார். இது உச்ச நீதிமன்றத் தீர்ப்பை முற்றிலும் அவமதிப்பதாகும்.

இந்துத்துவா சித்தாந்தத்தின் பிரச்சாரகராக, கல்லூரிக் கூட்டத்தில் பங்கேற்ற மாணவர்களை ‘ஜெய் ஸ்ரீராம்‘ என்று கோஷமிடுமாறு அவர் வலியுறுத்தியபோது முரண்பாடு புதிய உச்சங்களைத் தொட்டது.

அவரது செயல்களும் அறிக்கைகளும் எப்போதும் மாநில அரசாங்கச் செயல்பாட்டை விமர்சிப்பதாகவும், சீர்குலைக்கும் தன்மையுடனும் உள்ளன. உச்ச நீதிமன்றம் நியாயப்படுத்தியுள்ளபடி, ஆளுநர் ஒரு வினையூக்கியாக இருக்க வேண்டும், தடுப்பவராக இருக்கக் கூடாது.

ஆளுநர் ஒரு தடுப்பவராக மட்டுமல்ல, அவர் ஒரு தீவிர சீர்குலைப்பவராகவும் இருக்கிறார்.

ஆர்.என்.ரவி எப்போதும் ஆளுநர் பதவியின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பவராக இருந்து வருகிறார். அவரது செயல்களும் அறிக்கைகளும் அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கங்களை அவமதிப்பதாக இருக்கின்றன. அவரது சமீபத்திய நடவடிக்கைகள் உச்ச நீதிமன்ற தீர்ப்பை மீறுவதாகும். இதனால் ஆர்.என்.ரவி ஆளுநராகத் தொடர்வதற்கான அனைத்துச் சட்ட, அரசியலமைப்பு மற்றும் தார்மீகத் தகுதி அனைத்தையும் இழக்கிறார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழுக் கூட்டம், ஆர்.என்.ரவியை தமிழ்நாட்டின் ஆளுநர் பதவியில் இருந்து நீக்குமாறு இந்தியக் குடியரசுத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# ஆசிரியர், அரசு ஊழியர்களுக்குப் பழைய ஓய்வூதியத் திட்டம்

## சட்டப் பேரவையில் டி.ராமச்சந்திரன் எம்எல்ஏ வலியுறுத்தல்

**24.04.25 அன்று பள்ளிக் கல்வித்துறை மற்றும் உயர் கல்வித்துறை மானியக் கோரிக்கையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் டி.இராமச்சந்திரன் அவர்கள் பேசியதாவது:**



### பள்ளிகளில் சாதிய மோதல்

சமீப காலமாகப் பள்ளிகளில் மாணவர்களிடையே ஜாதிய வன்மங்கள், தீண்டாமை, ஜாதி ரீதியிலான மோதல்கள் அதிகரித்து வருவது பெரும் கவலையளிக்கிறது. திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் தனியார் மெட்ரிக் பள்ளியில் எட்டாம் வகுப்பு மாணவன் சக மாணவனை வகுப்பறையில் வெட்டியதும், தடுக்க வந்த ஆசிரியரை வெட்டியதும் அதே போல நாங்குநேரியில் 2023 ஆம் ஆண்டு பள்ளியில் படித்து வந்த பட்டியலின மாணவன் சின்னதுரை மீது வேறு சமுதாய மாணவர்கள் வீடு புகுந்து வெட்டிய நிலையில், மீண்டும் கடந்த வாரம் ஆன்லைன் மூலம் பழகிய சிலர் தனியாக அழைத்துத் தாக்குதல் நடத்திருப்பது கவலைக்குரியது. அதேபோல கோவை மாவட்டம் கிணத்துக்கடவு தனியார் பள்ளியில் மாதவிடாயான மாணவியை சக மாணவர்களுடன் தேர்வு எழுத விடாமல் தனியாகப் படிக்கட்டில் அமர வைத்துத் தேர்வு எழுத வைத்திருப்பது நவீனத் தீண்டாமையாகும். இத்தகைய ஜாதியை வன்மங்களையும் தீண்டாமையும் தடுக்கும் வகையில் ஓய்வு பெற்ற நீதி அரசர் சந்துரு தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் இத்தகைய செயல்களை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

---

என் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசு கலை அறிவியல் கல்லூரியை வழங்கி கல்லூரிக் கட்டிடத்திற்கு ரூ.10 கோடி வழங்கி கல்லூரிக் கட்டிடத்தைக் காணொளி வாயிலாகக் கடந்த பிப்ரவரி மாதம் 15ஆம் தேதி திறந்து வைத்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய அரசு கல்விக்குச் செலவிடும் தொகையைச் செலவினமாகக் கருதாமல் எதிர்கால மனித வள ஆற்றலுக்கான மூலதனமாகக் கருதி இதுவரை இல்லாத அளவிற்குப் பள்ளிக் கல்வித்துறைக்கு ரூ.46 ஆயிரம் கோடியும், உயர் கல்வித் துறைக்கு 9 ஆயிரம் கோடியும் ஆக மொத்தம் கல்விக்காக 55 ஆயிரம் கோடி ரூபாய்களை ஒதுக்கீடு செய்திருப்பதை வரவேற்கிறேன்.

தமிழ்நாடு உள்ளிட்ட இந்தி பேசாத மாநிலங்களில் மும்மொழிக் கொள்கை என்ற பெயரால் இந்தி திணிக்கப்படுகிறது. இதை ஏற்க மறுக்கின்ற மாநிலங்களுக்கு SSA திட்டத்தில் நிதி தர மறுக்கப்படுகிறது, மிரட்டப்படுகிறது. இது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது.

காசி தமிழ்ச் சங்கத்தில் ஒரு வேடம், நாடாளுமன்றத்தில் ஒரு வேடம். இத்தகைய வேடதாரிகளைத் தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் நம்ப மாட்டார்கள்.

பிரதமர் வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போது திருக்குறளை மேற்கோள்காட்டிப் பேசுகிறார். தமிழ் மொழியின் பெருமைகளைப் பேசுகிறார். ஆனால், அவருடைய 10 ஆண்டு கால ஆட்சியில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக ஒதுக்கிய நிதி வெறும் 72 கோடி ரூபாய். ஆனால் செத்துப்போன சமஸ்கிருத மொழிக்கு ஒதுக்கிய நிதி ரூபாய் 1488 கோடி. சமஸ்கிருதம் என்பது எந்த மாநிலத்திலும் ஆட்சி மொழியோ, அலுவல் மொழியோ, பேசும் மொழியோ கூட இல்லை.

மொழிக்கான, ஒரு மொழிப் போராட்டம் நடத்திய மாநிலம் தமிழ்நாடு. அன்று 1968 ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தித் திணிப்பிற்கு எதிராக இதே சட்டமன்றத்தில் இரு மொழிக் கொள்கைதான் நடைமுறைப்படுத்துவோம் என்று தீர்மானத்தைக் கொண்டு வந்தார். முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ்ப் பாடத்தைக் கட்டாயமாக்கும் சட்டத்தை 2006 ஐ இதே அவையில் கொண்டு வந்தார். பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் வழியில் ஆட்சி செய்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதே அவையில் 2 ஆயிரம் கோடி அல்ல 10 ஆயிரம் கோடி கொடுத்தாலும் மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டோம் என்று துணிவோடும் துணிச்சலோடும் மும்மொழிக் கொள்கையை எதிர்த்த ஒரே முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர்தான் என்பதைப் பெருமிதத்தோடு இந்த அவையில் நான் பதிவு செய்கிறேன்.

தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரால் மீண்டும் குலக்கல்வியைத் திணிக்க ஒன்றிய அரசு முயற்சிக்கிறது. தேசியக் கல்விக் கொள்கையில் 3, 5 மற்றும் 8 வகுப்புகளுக்குப் பொதுத் தேர்வு நடத்தப்படுவதால் மாணவருடைய மனநிலை பாதிக்கப்படுகிறது. தேசியக் கல்விக் கொள்கை அமல்படுத்துகின்ற பிஜேபி ஆட்சி செய்கின்ற உத்தரப்பிரதேசம் மற்றும் அரியானா மாநிலங்களில் இடைநிற்றல் (Drop out) அதிகரித்துள்ளது. தேர்ச்சி விகிதம் குறைந்துள்ளது. மாணவர்கள் வருகையும் சேர்க்கையும் குறைந்துள்ளது. அரசு பள்ளிக் கட்டிடங்களுக்குக் காவிச் சாயம் பூசி காவி மயம் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு மாநிலத்தின் ஆளுநராக இருப்பவர் இந்தியா அரசமைப்புச் சட்டத்தின்பால் உறுதிமொழி ஏற்றுக்கொண்டவர். டாக்டர் அம்பேத்கர் அவர்களால் இந்தியா அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கு முன்பிருந்தே இந்தியாவில் அன்று முதல் இன்று வரை சனாதனத் தர்மத்தைத்தான் கடைப்பிடித்து வருகின்றனர் என்று பேசுகிறார்.

உலக நாடுகள் எல்லாம் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை (Artificial Intelligency) நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன. தலைசிறந்த நிறுவனமாக சென்னை ஐஐடி நிறுவனம் திகழ்கிறது. அதனுடைய இயக்குனர் காமகோடி அவர்கள் மாட்டு மூத்திரத்தில் மருத்துவக் குணம் இருக்கிறது. அதை நான் தினமும் குடிக்கிறேன். நீங்களும் குடியுங்கள் என்று பேசுகிறார். இத்தகைய பிற்போக்குக் கருத்துகளைப் பாடத்திட்டத்தில் கொண்டுவர முயற்சிக்கிறார்கள்.

ஒன்றிய அரசின் தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமான NCERT ஆங்கிலப் பாடப் புத்தகங்கள் 6 மற்றும் 7 வகுப்பிற்கான பெயர்களை ஹனிசக்கிள் மற்றும் ஹனிகோம்ப் என்றிருந்ததை இம்முறை பூர்வி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கணிதப் பாடப் புத்தகத்திற்கு ஆங்கிலத்தில் Mathametics என்ற இருந்த பெயரை கணித் பிரகாஷ் என்று மாற்றி உள்ளார்கள். இவ்வாறு பாடத்திட்டங்களை மாற்றி அமைக்கவும் வரலாற்றைத் திரிக்கும் முயற்சிதான் இந்த தேசியக் கல்விக் கொள்கை. ஆகவேதான் தமிழ்நாட்டிற்கான கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு வகுத்து இருப்பதை வரவேற்கிறேன்.

தனியார் பள்ளிகள் தமிழ்நாட்டில் புதியதாகத் தொடங்க மாநில அரசுடைய அனுமதி தேவை இல்லை ஒன்றிய அரசின் அனுமதி போதும் என்று மாநில சுயாட்சியில் ஒன்றிய அரசு தலையிடுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். தனியார் பள்ளிகளுக்கு நம்முடைய அரசு கடிவாளம் போட வேண்டும். இதற்கு ஒரே தீர்வு ஒத்திசைவுப் பட்டியலில் உள்ள கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வர வேண்டும்.

வகுப்பறைகள் இல்லாமல், இடவசதி இல்லாமல் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இல்லாமல் கழிப்பறை, குடிநீர் வசதிகள் இல்லாமல் பல பள்ளிகள் உள்ளன. அத்தகைய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் தூய்மைப் பணியாளர்கள் கழிவறைப் பணியாளர்கள் இரவுக் காவலர்கள் அலுவலக உதவியாளர்கள் பணியிடங்களைத் தமிழக அரசு நிரப்ப வேண்டும். இதன் மூலம்தான் தரமான கல்வியை வழங்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓர் ஆசிரியர் பள்ளி, ஈர் ஆசிரியர் பள்ளி என்று இல்லாமல் வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். மாணவர் ஆசிரியர் தேசிய விகிதாச்சாரம் 20 : 1 என்ற அளவில் ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும். அனைத்துப் பள்ளிகளிலும் ஆசிரியர்கள் வருகையை உறுதிப்படுத்தும் வகையில் பயோமெட்ரிக் (Bio metric) முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். கடந்த 10 ஆண்டுகளாக ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாததால் மாநிலம் முழுவதும் சுமார் 50 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளதாகத் தெரிய வருகிறது. ஆகவே அந்தக் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்.

பல மலை கிராமங்கள் அடர்ந்த வனப்பகுதியில் இருப்பதால் போதிய பேருந்து வசதி மற்றும் சாலை வசதிகள் இல்லாத காரணத்தினால் ஆசிரியர்கள் மலை கிராம பள்ளிகளுக்குச் சரியாகச் செல்வதில்லை. ஆகவே பழங்குடி மற்றும் மலைவாழ் மக்களின் குழந்தைகள் படிக்கின்ற மலை கிராமப் பள்ளிகளை உண்டு உறைவிடப் பள்ளிகளாக அமைக்க வேண்டும். மேலும் ஆசிரியர்களுக்கான குடியிருப்பு வசதிகளை உருவாக்கித் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

கட்டாய தமிழ்ப் பாடத்திட்டம் 2006 அமல்படுத்தப்பட்ட நிலையில் மொழிச் சிறுபான்மைப் பள்ளிகளில் கடந்த 10 ஆண்டுகளாக தமிழ் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாமல் deputation முறையில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதால் பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் தேர்ச்சி சதவீதம் குறைந்துள்ளது. ஆகவே, நிரந்தரமாக தமிழ் ஆசிரியர் பணியிடங்களை நியமிக்க வேண்டும்.

ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கையான பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். 9 லட்சம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பயன் பெறுகின்ற சரண்டர் விடுப்புப் பண பலன்களை நடப்பாண்டிலேயே நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்.

கடந்த 13 ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் 12 ஆயிரம் ஓவியம், தையல், உடற்கல்வி, இசை, பகுதி நேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்து கால வரை ஊதியம் வழங்க வேண்டும்.

தனியார் பள்ளிகளில் கட்டணங்கள் முறைப்படுத்தும் சட்டம் 2009 நடைமுறையில் இருந்தாலும் பெரும்பாலான தனியார் பள்ளிகள் பின்பற்றுவதில்லை. கட்டண நிர்ணயக் குழு நிர்ணயித்த கட்டணங்களைவிடக் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. கடந்த காலங்களில் 2 அல்லது 3 தவணைகளில் கட்டணங்களைச் செலுத்த அனுமதித்த பள்ளிகள் தற்போது ஒரே தவணையில் கட்டணங்களைச் செலுத்த வேண்டும் எனப் பெற்றோர்களை நிர்பந்தம் செய்கின்றார்கள். பெரும்பாலான பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுடைய எதிர்காலத்தை மனதில் கொண்டு புகாரளிக்க அச்சப்படுகிறார்கள். அவ்வாறு புகார் அளிப்பவர்களின் பெயர்களை ரகசியம் காக்க வேண்டும். மேலும் கட்டணக் கொள்ளையில் ஈடுபடுகின்ற தனியார் பள்ளிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆளுநர் என்பவர் ஆட்சியாளர் அல்ல, ஒன்றிய அரசால் நியமனம் செய்கின்ற நியமன உறுப்பினர். அவருக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் ஒப்புதல் அளிக்க வேண்டும். குடியரசுத் தலைவர் மூன்று மாத காலத்திற்குள் ஒப்புதல் அளிக்க வேண்டும் எனக் கால நிர்ணயம் செய்து மக்களால் தேர்வு செய்யப்பட்ட மாநில அரசுக்கும், அமைச்சரவைக்கும்தான் அதிகாரம் இருக்கிறது என்ற வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பின் மூலம் மாநில சுயாட்சி உரிமையை மீண்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிலைநாட்டியுள்ளார்.

கடந்த 12ஆம் தேதி தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் அவர்கள் துணைவேந்தர்கள் கூட்டத்தைக் கூட்டி உயர்கல்வியை மேம்படுத்துவது குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உள்ள நிலையில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி வேந்தராக இல்லாத நிலையில், உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் வகையில் 25, 26 ஆகிய இரண்டு நாட்கள் துணைவேந்தர்கள் மாநாடு அவருடைய தலைமையில் நடைபெறும் என்றும், அந்த மாநாட்டைக் குடியரசுத் துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் துவக்கி வைப்பார் என்றும் அறிவித்திருப்பது உச்சநீதிமன்ற தீர்ப்பை அவமதிக்கும் செயலாகும். ஆளுநரின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து அரசியல் கட்சிகளும், ஜனநாயக சக்திகளும் கறுப்புக்கொடி கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு தொடர்ந்து மாநில அரசின் செயல்பாடுகளை முடக்கி தான் தோன்றித்தனமாகச் செயல்படுகின்ற ஆளுநரை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்.

மாநிலம் முழுவதும் உள்ள 171 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுமார் 7300 கௌரவ விரிவுரையாளர்கள் தொகுப்பூதிய முறையில் பணியாற்றி வருகின்றனர். இவருக்கு மாத ஊதியமாக ரூ.25 ஆயிரம் வழங்கப்படுகிறது. இவர்களுக்கு மே மாத ஊதியம் மருத்துவ விடுப்பு பேறுகால விடுப்பு மறுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அவர்களுக்குப் பல்கலைக்கழக மானியக் குழு பரிந்துரைகள் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மாதம் ரூ.50,000 வழங்க வேண்டும் பணிநிரந்தரம் செய்யப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 7000 பேராசிரியர் பணியிடங்களும் அரசு பல்துறை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகளிலும் காலியாக உள்ள ஆயிரக்கணக்கான பேராசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.



த.லெனின்

# இந்தித் திணிப்பு

# பின்வாங்கிய மராட்டிய பாஜக அரசு!




இந்தியாவில் பன்முகத்தன்மை என்பது பல்வேறு இனங்கள், மொழிகள், மதங்கள் மற்றும் கலாச்சாரங்களை உள்ளடக்கியது. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே இந்தியா! இதைச் சிதைத்து எதையாவது திணிப்பதைக் கண்டித்துத் தான் மிக வீரியமாக எழுகிறது எதிர்ப்புக் குரல்!

### தேரா தேசியக் கல்விக் கொள்கை!

கடந்த 2020ஆம் ஆண்டு ஒன்றிய அரசு நாடு முழுவதும் உள்ள கல்வி நிலையங்களில் தேசியக் கல்வி கொள்கையை அமல்படுத்தியது.

புதிய கல்விக் கொள்கையில் உள்ள முக்கிய அம்சமான மும்மொழிக் கொள்கை, தமிழ்நாட்டிற்கு ஏற்புடையதல்ல என்று கூறி தமிழ்நாடு அரசு அந்தத் திட்டத்தை எதிர்த்து வருகிறது.

ஒன்றிய பா.ஜ.க அரசு மும்மொழிக் கல்விக் கொள்கை என்று கூறி மறைமுகமாக இந்தியை தமிழ்நாட்டிற்குள் திணிக்க முயற்சி செய்கிறது என்று தமிழகத்தில் தொடர்ந்து எதிர்ப்புக் குரல் வந்து கொண்டே இருக்கிறது.

அதே சமயம் ஒன்றிய பாஜக தாய்மொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளுடன் ஏதேனும் ஒரு மூன்றாவது மொழியைக் கற்றுக்கொண்டால் மாணவர்களின் அறிவு வளர்ச்சி கூடும் என்று கூறி வருகின்றனர். அது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் தேசியக் கல்விக் கொள்கையை அமல்படுத்தினால் தான் கல்வி தொடர்பான நிதி ஒதுக்கப்படும் என்று ஒன்றிய பா.ஜ.க அரசு கட்டாயப்படுத்தி வருகிறது. இதனால், தமிழ்நாடு அரசுக்கும், ஒன்றிய பா.ஜ.க அரசுக்கும் இடையே மோதல் போக்கு உருவாகியது. இன்று இது நாடு முழுவதும் பெரும் விவாதப் பொருளாக மாறியுள்ளது.

### மும்பைக்கு மொழி இல்லையா?

மகாராஷ்டிராவில் வாழ மராத்தி தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றி இதைப் போல ஆர்.எஸ்.எஸ் தலைவர் பையாஜி ஜோஷி கூறியது அங்கு ஆளும் பாஜக சிவசேனா என்சிபி கூட்டணிக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து அவர் பேசுகையில், மும்பைக்கு ஒரு மொழி கூட இல்லை என்றும். மும்பையின் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி மொழி உள்ளது. காட்கோபர் பகுதியின் மொழி குஜராத்தி. எனவே மும்பையில் வசிக்கிறீர்கள் என்றால், நீங்கள் மராத்தி மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்தார். அவரது இந்த பேச்சு மகாராஷ்டிரா முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஐசிஎஸ்இ மற்றும் சிபிஎஸ்இ வாரியங்களுடன் இணைக்கப்பட்ட தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகளில் பாஜக தலைமையிலான மகாராஷ்டிரா அரசு, மராத்தி மொழியை கட்டாயமாக்கியிருக்கும் நேரத்தில், ஆர்எஸ்எஸ் தலைவரின் கருத்துக்கள் எதிர்க்கட்சிகளால் கடும் விமர்சனத்துக்குள்ளாகி வருகிறது. அந்த வகையில், சிவசேனா உத்தவ் பிரிவு தலைவர் உத்தவ் தாக்கரே கூறுகையில், "இதுதான் பாஜகவின் மறைமுக திட்டம். அவர் மீது தேசத்துரோக வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும் என்று கூறியதுடன். நான் முதல்வராக இருந்தபோது மாநிலத்தில் மராத்தி மொழியை கட்டாயமாக்க ஒரு சட்டத்தை இயற்றியிருந்தேன். இப்போது, அவரது கருத்துகள் அச்சட்டத்திற்கு எதிரானதாக உள்ளது. தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இதே போன்று பேசிவிட்டு அவர் திரும்பி வரமுடியுமா?." என்று பேசியுள்ளார்.

இந்நிலையில், மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் சட்டப்பேரவையில் தனது நிலைப்பாட்டை கூறினார். அதில் அவர் கூறியதாவது, "மராத்தி மொழி மாநிலத்தின் கலாச்சாரம் மற்றும் அடையாளத்தின் ஒரு பகுதியாகும். அதைக் கற்றுக்கொள்வது ஒவ்வொரு குடிமகனின் கடமையாக இருக்க வேண்டும். மராத்தி மொழி மகாராஷ்டிராவில் மதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் அது நமது கலாச்சார, பாரம்பரியத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும்" என்று தெரிவித்துள்ளார்.

### மராத்தி தெரியாது என்றால் கன்னத்தில் அறை!

மகாராஷ்டிரா மாநிலத்தில், நவநிர்மாண் சேனா கட்சியின் தலைவரான ராஜ் தாக்கரே பொதுக் கூட்டத்தில் ஒன்றில் உரையாற்றிய போது "நமது மும்பையில், அவர்கள் மராத்தி பேசத் தெரியாது என்று சொல்கிறார்கள். அப்படி சொல்பவர்களின் கன்னத்தில் அறை கொடுப்போம். ஒவ்வொரு மாநிலத்திற்கும் சொந்த மொழி உண்டு, அது மதிக்கப்பட வேண்டும். மும்பையில் மராத்தி மதிக்கப்பட வேண்டும். நீங்கள் இங்கு வசித்து, அந்த மொழியைப் பேசவில்லை என்றால், நீங்கள் அதற்குத் தகுந்த முறையில் நடத்தப்படுவீர்கள். இனி ஒவ்வொரு வங்கியையும், ஒவ்வொரு நிறுவனத்தையும் சரிபார்க்க வேண்டும். அங்கெல்லாம், மராத்தி மொழி பயன்படுத்தப்படுகிறதா? என்று சரிபார்க்க வேண்டும். நீங்கள் அனைவரும், மராத்தி மொழிக்காக உறுதியாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டைப் பாருங்கள், அங்கு இந்தி வேண்டாம் என்று மக்கள் துணிந்து சொல்கிறார்கள் என்று பேசியுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### பல்டி அடித்த பட்னாவிஸ்!

மகாராஷ்டிரா பாஜக கூட்டணி அரசு ஒன்றாம் வகுப்பு முதல் இந்தி கட்டாயப் பாடம் என்ற அறிவிப்பையும் வெளியிட்டது. இதற்கு மகாராஷ்டிரா எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். போராட்டங்களையும் நடத்தினர். அரசின் இந்த முயற்சி மராத்தி மொழியையும், கலாசாரத்தையும் அழிக்கும் செயல். மாநில மொழிகளை அழிக்க பாஜக துடிக்கிறது என்றும் விமர்சித்தனர். இதனை அடுத்து அரசின் மொழி பரிந்துரை வழிகாட்டுதல் குழு உறுப்பினரும் கல்வியாளருமான ரமேஷ் பன்சே மகாராஷ்டிராவில் இந்தி திணிப்பை எதிர்த்துள்ளார். அதன் முடிவைத் திரும்பப் பெறுவது தொடர்பாக மாநில அரசுக்கும் தானும் கடிதம் எழுதியுள்ளதாக அவர் கூறினார். கரடியே காரி துப்பியதைப் போல இந்தி மொழியைத் திணிப்பதற்கு அவர்கள் நினைத்த இக்குழுவும் தனது எதிர்ப்பைத் தெரிவித்து விட்டது. இந்தி கட்டாயப் பாடம் என்ற முடிவை அரசு திரும்பப் பெற வேண்டும் எனவும் வலியுறுத்தியது. அதுவரை இந்தி கட்டாயப் பாடம் என்று பேசிய பட்னாவிஸ், மராத்திதான் முக்கியம் எனப் பல்டி அடித்து விட்டார்.

### மு.க.ஸ்டாலினின் கிடுக்கிப்பிடி கேள்விகள்

பட்நாவிஸின் முடிவை ஒன்றிய அரசு ஏற்கிறதா? அப்படியானால், புதிய தேசியக் கல்விக் கொள்கையில் மூன்றாம் மொழி கட்டாயமாகக் கற்பிக்கப்பட வேண்டியதில்லை என்பதை உறுதிப்படுத்தும் தெளிவான உத்தரவை ஒன்றிய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் பிறப்பிக்குமா? என்ற தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்விக்கு இன்று வரை எந்தப் பதிலும் இல்லை. ஒருபுறம் இந்தி கட்டாயமில்லை என பட்னாவிஸ் கூறிய ஒரு சில நாளிலேயே 'இந்தி கட்டாயம்' என்ற வார்த்தை அரசு ஆணையில் உள்ளது. அதனை நீக்கிப் புதிய அரசாணை வெளியிடப்படும் என உண்மையைப் போட்டுடைத்தார் கல்வி அமைச்சர் தாதா புசே. பாஜக ஆளும் மகாராஷ்டிராவிலேயே இந்த நிலை ஏற்பட்டது ஒன்றிய அரசுக்குப் பெரும் பின்னடைவு. அவர்களது ஜனநாயகம் அற்ற நடவடிக்கைகளுக்கு விழுந்தது பேரிடியாகும். தங்களது திட்டங்களை அமல்படுத்தினால்தான் கல்விக்கான நிதியை ஒதுக்குவோம் என்ற பாஜகவின் வாதம், அதற்காக விழுந்து, விழுந்து வாதாடிய தமிழ்நாட்டின் சங்கி, மங்கிகள் இப்போது என்ன சொல்வார்கள்? பாஜவே ஆட்சி செய்தாலும் இந்தியைத் திணிக்க முடியாது என்பதை இது நிரூபித்துள்ளதே!

### மும்மொழிக் கொள்கை வடமாநிலங்களில் தோல்வி

உத்தரபிரதேசம், பீகார், டெல்லி, அரியானா, மத்தியபிரதேசம், ராஜஸ்தான், உத்தரகண்ட் உள்ளிட்ட இந்தி பேசும் வட மாநிலங்களில் முதல் மொழி இந்தி, 2 வது மொழி ஆங்கிலம். மூன்றாவது மொழியாக பேச்சு வழக்கில் இல்லாத சமஸ்கிருதம் கற்பிக்கப்படுகிறது. இந்த மாநிலங்களில் சிலவற்றில் சமஸ்கிருதத்துக்குப் பதிலாக உருது மொழி கற்பிக்க வலியுறுத்தப்படுகிறது. ஆனால், இஸ்லாமிய வெறுப்பின் அடிப்படையில் அதை அவர்கள் ஏற்பதில்லை. இந்த மாநிலங்களில் தென் மாநில மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட மொழிகள் எது ஒன்றும் மூன்றாவது மொழியாகக் கற்பிக்கப்படுவதில்லை என்கிறார் கர்நாடகாவைச் சேர்ந்த கல்வியாளர் நிரஞ்சனராத்யா.

தென்மாநிலங்களின் மொழியை ஒரு போதும் மூன்றாவது மொழியாக அவர்கள் கற்பிப்பதில்லை. வடமாநிலங்களில் உள்ள பஞ்சாபி, காஷ்மீரி மொழிகள் கூட 2 வது அல்லது 3 வது மொழியாக அங்கு கற்பிக்கப்படவில்லை. அப்படியிருக்க, வடமாநிலங்களின் உள்ள இந்தியை இங்கு எவ்வாறு ஏற்க முடியும்? என்றும் வினா எழுப்புகிறார்.

தொடர்புக்கு: 9444481703

## மொழிகளின் அருங்காட்சியகம் இந்தியா!




2011ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் உள்ள புள்ளி விவரங்களின்படி, இந்தியாவில் அதிக மக்கள் பேசும் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்தி உட்பட 122 மொழிகளும், வட்டார அளவில் சிறு எண்ணிக்கையிலான மக்கள் பேசும் 1,599 மொழிகளும் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள தாய் மொழிகள் 19,569.

8 வது அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை 22 ஆகும்.

10,000க்கும் மேற்பட்ட மக்களால் பேசப்படுபவை 121 மொழிகள்.

யுனெஸ்கோ பட்டியலின்படி அழியும் நிலையில் உள்ள இந்திய மொழிகள் 197 ஆகும். இந்த லட்சணத்தில் இதைத் தீர்க்க இயலாத ஒன்றிய மோடி அரசு தாய்மொழி வழி கல்விதான் சிறந்தது. அதற்காகத்தான் பாஜக போராடுகிறது என்று எப்போதும் பேசி வருவது விந்தையிலும் விந்தை!

பாசிசம் எந்த வகையில் படம் எடுத்து வந்தாலும் அதைப் பந்தாடும் சூட்சமம் ஜனநாயகக் குரல்களில் எப்போதும் எதிரொலிக்கும் அதன் அறிகுறிதான் சொந்த மண்ணிலேயே அவர்களது இந்தச் சறுக்கல். இது என்றென்றும் தொடரும்!

# பகல்காம் பயங்கரவாதத் தாக்குதலு



வ.மணிமாறன்

**ஜம்மு காஷ்மீரில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் 26 பேர் பலியாகினர். அவர்களில் எட்டுப் பேர் இஸ்லாமியர். இந்தத் திடீர்த் தாக்குலால் பரிதவித்து நின்ற பயணிகளை உள்ளூர் இஸ்லாமியர்கள் பாதுகாத்து அனுப்பி வைத்தனர். பயங்கரவாதத்தை அனைவரும் கண்டிக்கும் அதேநேரத்தில், பயங்கரவாதச் செயல்களுக்கு எதிரான மக்களின் உணர்வுகள் மத வெறியாக, இஸ்லாமிய வெறுப்பு அரசியலாக மாற்றப்படாமல் தடுக்கப்பட வேண்டும்.**

ஜம்மு – காஷ்மீரின் பைசரன் பள்ளத்தாக்கு கடல் மட்டத்தில் இருந்து 8 ஆயிரம் அடி உயரத்தில் உள்ளது. பசுமையான புல்வெளி, அதனைச் சுற்றியுள்ள அடர்காடு, அவற்றுக்கு அப்பால் பனி சூழ்ந்த மலைகள் என வசீகரிக்கும் இயற்கை அழகு நிறைந்த பகுதி. கோடை காலத்தில் புற்களும் காட்டு மலர்களுமாக காட்சியளிக்கும். குளிர் காலத்தில் பனிப் போர்வை போர்த்தியிருக்கும். சுற்றுலாப் பயணிகளையும் திரைப்படத் துறையினரையும் இவைதான் வசீகரிக்கின்றன.

அனந்த்நாக் மாவட்டத்தில் உள்ள பகல்காமில் இருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் பைசரன் பள்ளத்தாக்கு உள்ளது. பகல்காமில் இருந்து பைன் மற்றும் தேவதாரு மரங்கள் நிறைந்த அடர்ந்த வனத்தின் ஊடாகத்தான் பைசரன் பள்ளத்தாக்கிற்கு செல்ல வேண்டும். அதுவும் நடந்தோ, குதிரை அல்லது கழுதைகள் மீதோதான் செல்ல முடியும். இதனால் பைசரன் செல்வதே சிலிர்ப்பூட்டும் அனுபவமாக இருக்கும்.

பைசரன் பள்ளத்தாக்கு அருகேயுள்ள கொல்காய் பனி மலையில் இருந்துதான் லிடர் நதி உருவாகிறது. இந்த நதி பகல்காம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி ஊடாகப் பாய்ந்தோடுவது பைசரனுக்கு மேலும் அழகூட்டுகிறது. இப்பகுதியில் கோடை காலங்களில் சுமார் 15 முதல் 25 டிகிரி வரை வெப்பநிலை இருக்கும். குளிர் காலங்களில் 0 டிகிரிக்கும் கீழ் சென்றுவிடும்.

இத்தகைய எழிலும் பொலிவும் நிறைந்த பைசரன் பள்ளத்தாக்குப் பகுதியில் ஊடுருவிய பயங்கரவாதிகள் ஏப்ரல் 22 அன்று குருவி சுடுவது போல் சுற்றுலாப் பயணிகளைச் சுட்டுத்தள்ளினர். இதில் 26 பேர் செத்து மடிந்தனர்.

அழகும் வசீகரமும் நிறைந்த பள்ளத்தாக்கு, அழுகுரலும் அச்சமும் நிறைந்ததாக மாறியது. அவர்களைக் காப்பாற்றப் போராடிய குதிரைச் சவாரி வீரரின் உயிரையும் பயங்கரவாதம் பறித்துக்கொண்டது. அமைதியையும் வனப்பையும் நாடி வந்த சுற்றுலாப் பயணிகள், எங்கு செல்வது? என்ன செய்வது? என்பது தெரியாமல் திண்டாடினர். அந்தப் பகுதி மக்கள் அவர்களைப் பாதுகாத்து, பத்திரமாக அனுப்பி வைத்தனர். காயம்பட்டுக் கிடந்தவர்களை முதுகில் சுமந்து சென்று மருத்துவமனையில் சேர்த்தனர். எங்கிருந்து குண்டுகள் வரும்? யார் சுடுவார்? என்பது தெரியாமல் பீதியில் உறைந்திருந்த சுற்றுலாப் பயணிகளை, ஆற்றுப்படுத்தி, அமைதிப்படுத்தி அப்பகுதி இஸ்லாமியர்கள் அனுப்பிவைத்தனர்.

யாரும் எதிர்பாராத நேரத்தில் நடந்த கொடூரத் தாக்குதலில், அப்பாவி சுற்றுலாப் பயணிகளின் கண் முன்னே அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். உறவுகளை இழந்து தவிக்கும் அந்த துயரக் காட்சிகள் ஒட்டுமொத்த இந்தியாவையும் அதிர வைத்தன. பயங்கரவாதச் செயல்களுக்கு எதிராகக் குரல்கள் ஓங்கி ஒலித்தன.





■ மிட்நாப்பூர் ரயில் நிலையத்தில் பங்களாதேஷ், பாகிஸ்தான், பாலஸ்தீனக் கொடிகளை நடந்து செல்லும் வழியில் வரைந்து வைத்துள்ளனர்.



■ பகல்காமில் படுகாயமடைந்த இளைஞரைச் சுமந்து சென்று காப்பாற்றிய காஷ்மீரி இஸ்லாமியர்.



■ பரிதவித்து நின்ற சுற்றுலாப் பயணிகளை வீட்டுக்கு அழைத்துச் சென்று உணவளித்த உள்ளூர் இஸ்லாமியர்கள்.

## காஷ்மீர் தாக்குதலும் உ

பனிப்போர் காலத்தில் அமெரிக்காவின் தெற்காசிய கூட்டாளியாக பாகிஸ்தான் இருந்தது. அதன் பின்னர், அமெரிக்காவில் ஜார்ஜ் டபிள்யூ புஷ் தொடங்கி, ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி சார்பாக ஆட்சிக்கு வந்த அனைத்து அதிபர்களும் அமெரிக்க இந்திய 'கூட்டை' முதன்மைப்படுத்தினர். அமெரிக்காவின் வல்லரசிய நலனைப் பேண 'அவசியம்' என்று கருதினர். இதனால் இந்தியாவுக்கு அணுசக்தி தொழில்நுட்பத்தைப் பெறுவது உள்ளிட்ட கொள்கைத்திட்டம் (Strategy) சார்ந்த சலுகைகளை வழங்கினர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பாகிஸ்தான், பிராந்தியத்தின் அமைதியையும் 'அதிகார சமநிலையை"யும் சீர்குலைக்கப்படுவதாக குற்றம்சாட்டியது. இதனையடுத்து சீனாவுடன் நெருக்கம் காட்டிய பாகிஸ்தான், அதனுடன் கொள்கைத்திட்டம் சார் கூட்டாளியாக மாறியது. அமெரிக்காவையும் இந்தியாவையும் பகைத்துக்கொள்ளத் துணிந்தது.

இந்த நிலையில், அமெரிக்கா, சீனா இடையே மோதல் முற்றிவருகிறது. இதனால் தெற்காசிய புவிசார் அரசியலில் முக்கியத்துவமுடைய பகுதியாக காஷ்மீரை மாற்றியுள்ளது.

### பயங்கரவாதிகள் எப்படி ஊடுருவினர்?

அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 370ஐ நீக்கிவிட்டால், காஷ்மீரில் தீவிரவாதத் தாக்குதல்களே நடைபெறாது என்று ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அறிவித்தாரே, ஏன் இப்படி நடந்தது என்ற கேள்விகளும் எழுந்தன.

ஒன்றிய பாஜக அரசு காஷ்மீருக்கு சிறப்பு அதிகாரம் அளிக்கும் 370வது பிரிவை அகற்றி, இரண்டு யூனியன் பிரதேசங்களாகத் துண்டாடியது. பயங்கரவாதத் தாக்குதல் இனிமேல் நடக்காது. அமைதியின் உருவமாகிவிடும். காஷ்மீரின் வளர்ச்சி ராக்கெட் வேகத்தில் இருக்கும். இப்படி எல்லாம் மோடியும் அமித்ஷாவும் தம்பட்டம் அடித்தனர். "யாராலும் செய்ய முடியாததைச் செய்துவிட்டோம். காஷ்மீர் எப்படி மாறப்போகிறது என்று பாருங்கள்" எனப் பீற்றினர்.

இப்படிச் சொல்லி ஆறு ஆண்டுகள் ஓடிவிட்டன. என்ன நடந்தது?

அதிகமான ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டிருக்கும் பகுதி காஷ்மீர், அங்கு 28 பேருக்கு ஒரு ராணுவ வீரர் நிறுத்தப்பட்டுள்ளார். அரசியல் கட்சித் தலைவர்களுக்குக் கடும் கட்டுப்பாடு. அவர்களுக்கு அடிக்கடி வீட்டுச்சிறை. உளவுத்துறையின் தீவிர கண்காணிப்பில் மக்களின் அன்றாட வாழ்க்கை, உலகிலேயே இணைய வசதி (இன்டர்நெட்) அதிகமாகத் துண்டிக்கப்பட்ட பகுதி. ஒன்றிய பாஜக அரசின் மேற்பார்வையில்தான் அத்தனை பணிகளும் காஷ்மீரில் நடக்கின்றன. காஷ்மீர் காவல்துறைகூட ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா கட்டுப்பாட்டில்தான் உள்ளது.

# ம் இஸ்லாமிய வெறுப்பு அரசியலும்



## லகின் புவிசார் அரசியலும்

காஷ்மீரின் சிறப்புரிமையைப் பறிக்கும் சங் பரிவாரின் நீண்டகால நோக்கத்தை இரண்டாம் முறை ஆட்சிக்கு வந்த (2019 ஆம் ஆண்டு) பிரதமர் மோடி நிறைவேற்றினார். காஷ்மீரை இரண்டாகப் பிரித்து, யூனியன் பிரதேசமாக மாற்றினார். இந்த நடவடிக்கை இந்துத்துவத்தின் அரசியல் நோக்கத்தை நிறைவேற்றுவது மட்டுமல்ல, புவிசார் அரசியல் அடிப்படையிலானதுமாகும். சீனாவின் எல்லையில் உள்ள லடாக் பகுதி யூனியன் பிரதேசமாக மாற்றி, ராணுவ உள்கட்டமைப்புத் திட்டங்களை சுதந்திரமாக மேற்கொள்வதற்கானதும் ஆகும்.

இந்நிலையில் பகல்காம் பகுதியில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலால் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பயன்படுத்தி, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளின் ஆளும்தரப்பும் மதவெறியைத் தூண்டிக் கொண்டிருக்கின்றன. பிற்போக்குக் கொள்கைகளையும் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றன. அதேநேரத்தில் அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே ராணுவ மோதல் ஏற்பட்டால், அது பேரழிவில்தான் முடிவுக்கு வரும்.

இவற்றை எல்லாம் மீறி பயங்கரவாதிகளால் எப்படி ஊடுருவ முடிந்தது? குருவி சுடுவது போல் மக்களை சுட்டுத்தள்ளிவிட்டுச் செல்ல முடிந்தது எப்படி? மோடியும் அமித்ஷாவும் பதில் சொல்வார்களா? ஆர்எஸ்எஸ், பாஜக பதில் சொல்லுமா?

இதற்கு ஒன்றிய அரசும் உள்துறை அமைச்சரும் பதில் சொல்லியிருக்க வேண்டும். செய்தியாளர்களைச் சந்தித்து பிரதமர் விளக்கம் அளித்திருக்க வேண்டும். பாஜக பதிலளித்திருக்க வேண்டும். ஆனால் இவை எதுவும் நடக்கவில்லை. ஆனால் இஸ்லாமிய வெறுப்பு அரசியலை முடுக்கிவிட முயன்றனர்.

“முஸ்லீம் பயங்கரவாதிகள் இந்துக்களைக் குறிவைத்து சுட்டுக் கொன்றனர்.”

“உள்ளாடையை கழற்றிப் பார்த்துவிட்டு சுட்டனர்.”

“இந்துக்களுக்கு ஆபத்து” என்று சங்கிகள் பரப்பினர்.

கண் சிவந்தார் பிரதமர் மோடி என்று தமிழ்நாட்டு ஊடகம் ஒன்று தலைப்பிட்டது.

உத்தரகாண்டில் “காஷ்மீரி மாணவர்கள் மாநிலத்தைவிட்டே வெளியேற வேண்டும்” என சங்கி அமைப்பு ஒன்று கெடு விதித்தது.

“காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை சனாதனத்தால் நாடு ஒன்றுபட்டிருக்கிறது. இஸ்லாமியர்களைத் தூண்டிவிடுபவர்கள் அழிக்கப்படுவார்கள்’ என்று எச்சரித்தார் பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் நிஷிகாந்த் துபே.

“140 கோடி இந்தியர்கள் தேசப் பற்றையும் தேசிய வாதத்தையும் தங்களது உயரிய கடமையாகக் கருதும் வரை, பகல்காம் தாக்குதல் போன்ற நாட்டை உலுக்கும் சம்பவங்கள் நடக்கத்தான் செய்யும்” என்று ஒன்றிய அமைச்சர் பியூஸ் கோயல் எச்சரித்தார்.

பகல்காமில் இருந்து பதற்றத்துடனும் பரபரப்புடனும் கொல்கத்தா திரும்பிய பெண் ஒருவரிடம், “பெயர்களைக் கேட்டு, இந்து என்றால் மட்டும்தான் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர்” என்று சொல்லுமாறு மேற்கு வங்க பாஜக மூத்த தலைவர் சுவேந்து அதிகாரி அறிவுறுத்துகிறார். “இஸ்ரேல் காசாவை எப்படிக் கையாண்டதோ, அதேபோல் இந்தப் பிரச்சனையை மோடி கையாளுவார்” என்று அந்தப் பெண்ணிடம் அவர் உறுதி அளிக்கிறார். இந்து, இஸ்லாமியர் என்றெல்லாம் பிரித்துப் பார்த்துச் சுடவில்லை என அந்தப் பெண் விழிக்கிறார்.

பகல்காம் பகுதியில் இருந்து மீட்கப்பட்ட தமிழ்நாட்டு சுற்றுலாப் பயணிகள், சென்னை விமான நிலையம் வந்திறங்கிய போது, “இங்கு காஷ்மீர் மக்களைத் தீவிரவாதிகள் போல் சித்தரிக்கின்றனர். உண்மையில் காஷ்மீரிகள் அன்பானவர்கள். எங்களை அன்போடும் ஆதரவோடும் கவனித்து, பாதுகாப்பாக அனுப்பி வைத்தனர்” என்று கூறினர். (தொலைக்காட்சிகளில் வெளியாகியுள்ளன)

பயங்கரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்திய போது, பகல்காம் பகுதியில் இருந்த சுற்றுலாப் பயணிகள், சொந்த ஊர்களுக்குத் திரும்பியவுடன் பதிவேற்றிய காணொளிகளும் பேட்டிகளும் மாறுபட்டு இருந்தன.

தீவிரவாத தாக்குதலுக்கு ஆளான சுற்றுலாப் பயணிகளின் பயத்தையும் பசியையும் போக்க, காஷ்மீர் இஸ்லாமியர்கள் மசூதிகளுக்கும் தங்களின் வீடுகளுக்கும் அழைத்துச் சென்று உணவளித்து அன்பைப் பரிமாறியதை எடுத்துக் கூறினர். இவை தொடர்பான காணொளிகளையும் வெளியிட்டனர்.

பகல்காம் தாக்குதலை நாடே கண்டித்தது. காஷ்மீர் மக்களும் கண்டித்தனர். காஷ்மீரி இஸ்லாமியர்களும் ஊர்வலமாகச் சென்று கண்டனம் தெரிவித்தனர். பயங்கர வாதச் செயலுக்கு எதிராக முழுநாள் கடையடைப்பும் நடத்தினர். மத வேறுபாடுகள் இன்றி ஒரே குரலில் ஒலித்தனர். ஆனால் அதனை இந்துக்களின் எதிர்ப்பாகவும், இஸ்லாம் வெறுப்பு அரசியலாகவும் மாற்றிவிட சங் பரிவாரம் துடித்தது. அதன் ஊதுகுழல் ஊடகங்களும் இந்து, இஸ்லாம் மோதலாக மாற்றுவதற்கான எடுத்துரைப்பை (நேரேட்டிவ்) கட்டமைக்க முயன்றன. அதனையும் மீறி மக்கள் ஒன்றுபட்டு எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

பயங்கரவாதத் தாக்குதலில் பலியான 26 பேரில் எட்டுப் பேர் இஸ்லாமியர் என்பதும், பகல்காம் பகுதியில் பரிதவித்து நின்ற பயணிகளை காஷ்மீரி இஸ்லாமியர்கள் பாதுகாத்து அனுப்பிவைத்த நிகழ்வுகளும் மத வெறியைத் தூண்டும் முயற்சிகளுக்குத் தடுப்பாக இருந்துவிட்டன.

பயங்கரவாதச் செயல்களைத் தடுப்பது, பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வு காண்பது முக்கியமானதாகும். இவற்றுக்கு எதிரான மக்களின் உணர்வுகளை, போராட்டங்களைப் பயன்படுத்தி, இஸ்லாம் வெறுப்பு அரசியலைத் தூண்டிவிடுவதைத் தடுப்பதும் அவசியமாகும். உழைக்கும் மக்களிடம் இதற்கான விழிப்புணர்வை விரைவாக ஏற்படுத்த வேண்டும்.

தொடர்புக்கு: 9500001224

## சுற்றுலாத்துறை முடக்கம்

ஜம்மு–காஷ்மீரில் வசந்தகாலம் அண்மையில்தான் தொடங்கியது. அங்குள்ள பசுமையையும் பூத்துக் குலுங்கும் மலர்களையும் காண சுற்றுலாப் பயணிகள் குவியத் தொடங்கினர். ஸ்ரீநகரில் உள்ள துலிப் தோட்டம் திறக்கப்பட்டு 26 நாட்களைக் கடந்துள்ளன. 8.5 லட்சம் பார்வையாளர்கள் வந்து சென்றுள்ளனர். பகல்காம் பயங்கரவாதத் தாக்குதல் இவை அனைத்தையும் கலைத்துப் போட்டுவிட்டது.

இந்தத்தாக்குதலில்“மக்கள்மட்டும்கொல்லப்படவில்லை. ஜம்மு–காஷ்மீர் பொருளாதாரத்திற்குப் பங்களித்து வந்த சுற்றுலாத்துறையும் முடக்கப்பட்டு, மக்களின் வாழ்வாதாரம் பறிக்கப்பட்டுவிட்டது” எனச் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் கவலையுடன் கூறுகின்றனர்.

ஹோட்டல்கள், தங்கும் விடுதிகள், உவகையகங்கள் (ரிசார்ட்ஸ்) போன்றவற்றில் முன்பதிவு செய்திருந்த சுற்றுலாப் பயணிகள், அவற்றை எல்லாம் ரத்து செய்து வருகின்றனர். இதுவரை 13 லட்சம் முன்பதிவுகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக ஜம்மு காஷ்மீர் ஹோட்டல்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை 25 லட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் காஷ்மீருக்கு வந்துசெல்வது வழக்கம். “தாக்குதல் அச்சத்தால் இந்த ஆண்டு அவர்களில் 90 விழுக்காட்டினர் வரமாட்டார்கள்” என்று வணிகர்கள் கவலையுடன் கூறுகின்றனர்.




## தேர்தல் பரப்புரையில் மோடி

பகல்காம் பயங்கரவாதத் தாக்குதலைக் கேள்விப்பட்டவுடன், பிரதமர் மோடி கண் சிவந்தார். கோபத்தின் உச்சிக்கே சென்றார். பயங்கரவாதிகள் என்ன ஆகப் போகின்றனர் பாருங்கள்.. என்றெல்லாம் தமிழ்நாட்டு ஊடகங்கள் சில வர்ணித்தன.

ஆனால், பிரதமர் மோடியோ சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற இருக்கும் பீகார் மாநிலத்துக்குச் சென்றார். தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார். “தீவிரவாதிகளுக்குத் தக்க பதிலடி கொடுக்கப்படும். அது அவர்கள் நினைத்துப் பார்க்காத பதிலடியாக இருக்கும்” என்று பிரதமர் மோடி கர்ஜித்தார்.

ஜூன் 10 விவசாயத் தொழிலாளர்களின் தேசந்தழுவிய ஆர்ப்பாட்டம்

# மே 20 பொது வேலை நிறுத்தத்தில் பங்கேற்போம்

## தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க மாநிலக் குழு தீர்மானம்






தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலக் குழு கூட்டம் 28 .04.2025 அன்று கோவை ஜீவா இல்லத்தில் மாநிலத் தலைவர் என்.பெரியசாமி முன்னாள் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் மூத்த தலைவர் இரா. முத்தரசன் இன்றைய அரசியல் நிலைமை குறித்து விரிவாகப் பேசினார். டெல்லியில் நடைபெற்ற தேசியக் குழு கூட்ட முடிவுகளை, தேசியக் குழு துணைத் தலைவர் இராமமூர்த்தி விளக்கினார்.

சங்கத்தின் எதிர்கால திட்டங்கள் குறித்து பொதுச் செயலாளர் அ.பாஸ்கர் உரையாற்றினார். மே 20ஆம் தேதி நடைபெற உள்ள பொது வேலை நிறுத்தம் குறித்து மாநிலப் பொருளாளர் சி.சந்திரகுமார் பேசினார்.

- **மே தினத்தைத் தொழிற்சங்கங்களுடன் இணைந்து மாநிலம் முழுவதும் கொண்டாடுவது.**
- **மே 20 பொது வேலை நிறுத்தத்தில் பங்கேற்று, ஒன்றிய அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து அரசு அலுவலகங்கள் முன்பு மறியல் போராட்டம் நடத்துவது.**
- **ஜூன் 10 தேசந்தழுவிய ஆர்ப்பாட்டம்**

100 நாள் வேலை திட்டத்திற்கு கூடுதல் நிதி மற்றும் ஊதிய பாக்கிகளை வழங்க வலியுறுத்தி. வேலை நாட்கள் 200 ஆக உயர்த்தி, தின ஊதியம் 600 வழங்க வேண்டும்.

பிரதமர் வீடு மற்றும் கலைஞர் கனவு இல்ல திட்டத்திற்கு ரூபாய் 6 லட்சம் நிதி ஒதுக்க வேண்டும்.

விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும்.

குடிமனை இல்லாதோருக்குக் குடிமனைப் பட்டா வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூன் 10 அன்று அனைத்து மாவட்டங்களிலும், வட்ட அளவிலும் உள்ள அரசு அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது தீர்மானிக்கப்பட்டது.

# அரசு மருத்துவமனைகளில் போதிய சிறுநீரக மருத்துவ நிபுணர்களை நியமிக்க வேண்டும்

## சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் வேண்டுகோள்

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கொள்கை அறிக்கையில், டயாலிசிஸ் நோயாளிகளுக்கு அவர்களின் சிகிச்சையின் போது இலவச முட்டை, பால் மற்றும் சுண்டல் தரப்படும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டமன்றத்தில் அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது.

புரதச்சத்துக் குறைபாடு டயாலிசிஸ் நோயாளிகள் இறப்பதற்கு மிக முக்கியக் காரணமாக உள்ளது. இந்நிலையில் டயாலிசிஸ் சிகிச்சையில் உள்ள நோயாளிகளுக்கு நாளொன்றுக்குத் தேவையான புரதச்சத்து அதிகரிக்கும் வகையில் இலவச முட்டை, பால் மற்றும் சுண்டல் வழங்குவது அவர்களின் உயிர் காக்க உதவும். இதன் மூலம் காசநோய் போன்ற தொற்று நோய்கள் அவர்களுக்கு ஏற்படுவதும் குறையும். தமிழ்நாடு அரசின் இத்திட்டம் வரவேற்பிற்குறியது. பாராட்டிற்குரியது. இத்திட்டத்தை முறையாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

ஒவ்வொரு நிதியாண்டிலும், டயாலிசிஸ் சிகிச்சைக்காக மட்டும் தமிழ்நாடு அரசு சுமார் 150 கோடி ரூபாயைச் செலவிடுகிறது. சிறுநீரகச் செயலிழப்பை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிவது, அதற்கான சிகிச்சையையும் தொடக்கக் கட்டத்திலையே துவங்குவது இச்செலவைப் பெருமளவில் குறைக்கும். சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம் ஆகியவற்றை கண்டறிந்து சிகிச்சை வழங்குதல் போன்ற, சிறுநீரகச் செயலிழப்பைத் தடுக்கும் நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டும். தமிழ்நாட்டில் நாள்பட்ட நிரந்தரச் சிறுநீரகச் செயலிழப்பு உள்ளவர்களின் விழுக்காடு 8.4 ஆகும். இதைக் குறைப்பதும் அவசியமாகும். இதற்கு அரசு மருத்துவமனைகளில் போதுமான சிறுநீரக மருத்துவ நிபுணர்கள் வேண்டும்.

பத்து மாவட்டங்களில் அரசு மருத்துவமனைகளில் சிறு நீரக மருத்துவ நிபுணர்களே இல்லை. மேலும் பத்து மாவட்டங்களில் ஒரே ஒரு சிறு நீரக மருத்துவ நிபுணர்தான் உள்ளார். இதனால் சிறுநீரகச் செயலிழப்பை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிவதற்கும், தொடக்க நிலையிலேயே சிகிச்சை வழங்குவதற்கும் பெரும் தடையாகவும் உள்ளது.

எனவே, தமிழ் நாடு அரசு உடனடியாக அனைத்து மருத்துவக் கல்லூரி மற்றும் மாவட்ட மருத்துவ மனைகளிலும் குறைந்தபட்சம் இரண்டு சிறுநீரக மருத்துவ நிபுணர்களை நியமிக்க வேண்டுமென சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம், தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

# இப்போது கொதிக்கிறது!

**மோடி அறிவித்த திடீர் பண மதிப்பு நீக்கம் காரணமாக ஏற்பட்ட அவஸ்தையில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இறந்து போயிருக்கிறார்கள். மோடியின் ரத்தம் கொதிக்கவில்லை.**

**மோடி அறிவித்த திடீர் கோவிட் லாக் டவுன் காரணமாக நடை பயணம் துவக்கிய புலம் பெயர்த் தொழிலாளர்களில் 200 க்கும் மேற்பட்டவர்கள் வெயில், பசி மற்றும் சோர்வு காரணங்களால் இறந்தனர். மோடியின் ரத்தம் கொதிக்கவில்லை**

**மோடி அரசின் திறமையற்ற கோவிட் நிர்வாகம் காரணமாக பல ஆயிரம் இந்தியர்கள் மரணமடைந்தார்கள். மோடியின் ரத்தம் கொதிக்கவில்லை**

**மணிப்பூர் இனக்கலவரம் 200 க்கும் மேற்பட்ட உயிர்களைப் பலி கொண்டது. ஆயிரக்கணக்கானோர் படுகாயமுற்றார்கள். 70,000 த்துக்கும் மேற்பட்டோர் வீடு உடமைகளை இழந்து அகதிகள் முகாம் புகுந்தார்கள். மோடியின் ரத்தம் கொதிக்கவில்லை.**

**பசு மாடு கடத்தினார்கள் என்று சொல்லி கோமாதா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களினால் 60 க்கும் மேற்பட்ட அப்பாவி உயிர்கள் பலியாகி உள்ளன. மோடியின் ரத்தம் கொதிக்கவில்லை. இந்துத்துவத் தீவிரவாதிகளில் கைதான சிலர் ஜாமீனில் வெளியான போது அவர்களை மத்திய அமைச்சரே மாலையிட்டு வரவேற்ற அசிங்கங்களும் நடந்துள்ளன.**

**இந்தியாவில் ஆண்டுக்கு 32,000 வன்புணர்வுகள் அரங்கேறுகின்றன. அவற்றில் பல பாஜக பிரமுகர்களே முன்னின்று நடத்தியவை. அவர்களைக் காப்பாற்றுவதற்காக ராத்திரியோடு ராத்திரியாக இறந்த பெண்ணின் உடலை போலீசே எரித்துப் போட்ட அவலங்கள் நடந்துள்ளன. மோடியின் ரத்தம் கொதிக்கவில்லை.**

**இப்போது பீகார் சட்டமன்றத் தேர்தல் வருவதனால் மோடியின் ரத்தம் கொதிக்கிறது.**

# மக்கள் பாடகர் ப.லெனின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



திருச்சி பாரதி கலைக்குழு பாடகர் ப.லெனின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

திருச்சி பாரதி கலைக்குழு பாடகரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புறநகர் மாவட்டக் குழு உறுப்பினருமான ப.லெனின் (59) 26.04.2025 அன்று திருச்சி மருத்துவ மனையில் காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம்.

திருச்சி துப்பாக்கித் தொழிற்சாலையில் வேலை பார்த்த பக்கிரிசாமி கௌசல்யா தம்பதியருக்குப் பிறந்தவர். பக்கிரிசாமி தொழிற்சங்க அரங்கில் தீவிரமாகச் செயல்பட்டு வந்தவர் என்பதால் மகனுக்கு லெனின் என்று பெயர் வைத்தார்.

பள்ளி, கல்லூரிக் காலத்தில் லெனின் மாணவர் இயக்கத்தில் தீவிரமாகச் செயல்பட்டவர். இடதுசாரி கருத்துகளைப் பரப்ப ஒத்தை தப்பு மட்டுமே இசைக்கருவியாகக் கொண்டு அரசியல், கலை நிகழ்ச்சிகளை தமிழ்நாடு முழுவதும் நடத்தி வந்தவர்.

அமலாவை வாழ்விணையராகப் பெற்றவர். இவர்களின் மகள் மோனிஷா, தற்போது தனியார் கல்லூரியில் தமிழ்த் துறை பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இரண்டாவது மகள் செல்வி பவதாரிணி பொறியியல் பட்டதாரி சென்னையில் பணிபுரிந்து வருகிறார்.

பாரதி கலைக் குழுவில் காந்தி மனோ, தங்கவேலு, திருப்பாச்சேத்தி கலா ஆகிய கலைஞர்களை இணைத்துக் கொண்டு, அரசியல் நையாண்டி கலை நிகழ்ச்சிகளை நடத்தினார். மாற்று அரசியல் கருத்துள்ளவர்களையும் சிந்திக்கத் தூண்டும் நேர்மறை வாதங்களை அடுக்குவதில் வல்லவர்.

வகுப்புவாத, மதவெறி, சாதி வெறி, மூடக் கருத்துகளை எதிர்த்து நடைபெறும் போராட்டம் தீவிரமடைந்த வரும் சூழலில், தோழர் லெனின் மறைவு எளிதில் ஈடு செய்ய இயலாத இழப்பாகும்.

தோழர் லெனின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, செவ்வஞ்சலி செலுத்துகிறது என்று மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# குடியரசு துணைத் தலைவரின் வெறும் பேச்சு வினையாற்றாது

இந்தியக் குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் ஏப்ரல் 27ஆம் தேதி கோவை வேளாண் பல்கலைக்கழகத்தின் கருத்தரங்கில் உரையாற்றிய பொழுது, விவசாயிகள் தொழில் முனைவோர்களாகவும், வணிகர்களாகவும் மாற வேண்டும் என்று பேசியுள்ளார். இது வரவேற்கத்தக்கது. ஆனால், அதற்கான நடைமுறைத் திட்டத்தை ஒன்றிய அரசு உருவாக்கி இருக்கிறதா என்றால் இல்லை? வெறும் அறிவிப்பு பயன் தராது.

உலகிலேயே இந்தியாவில்தான் சிறு, குறு விவசாயிகள் 65 சதத்துக்கும் மேல் உள்ளனர். இவர்களிடம் சொந்த நிலம் என்பது குறைவு. குத்தகை விவசாயிகளே இதில் அதிகமாக உள்ளனர். அதிகப்பட்சம் இரண்டு ஏக்கருக்கு மேல் இவர்களிடம் இருக்காது. இவர்களை தொழில் முனைவோராக்கிட ஒன்றிய அரசின் திட்டங்களை அறிவிக்காது துணை ஜனாதிபதி பேசினால், இவரது விருப்பம் நிறைவேறாது.

அவர் மேலும் கூறியபடி, 1948இல் ஒரு ஹெக்டரில் 0.8 டன் கோதுமை விளைச்சல் இருந்த நிலையில், 1975 க்குப் பின் 4.8 டன் எனப் பசுமைப் புரட்சி உயர்த்தி இருக்கிறது. இதனால் இந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண் தொழில் 20.2 சதம் பங்களிப்பு செய்து வருகிறது. இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று, ஏற்றுமதியில் சாதனை படைத்து வருகிறது என்றெல்லாம் பெருமைப்பட்டுப் பேசி இருக்கிறார்.

உலக அளவில் உற்பத்தியை உயர்த்திக் கொடுத்திருக்கிற விவசாயிகளுக்கு ஒன்றிய அரசு என்ன பிரதிப் பலனைச் செய்திருக்கிறது.

சிறு குறு விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றி வருவது மட்டுமல்ல, விவசாய நிலங்களையே பெருமுதலாளிகளுக்குத் தாரை வார்க்கும் அரசின் சட்டத்தைக் கைவிட வேண்டும் என்று போராடுகிற விவசாயிகள் மீது அடக்குமுறை ஏவினால், இந்திய விவசாயிகள் எங்கே போவது?

வேளாண் உற்பத்தியை உயர்த்திக் கொடுத்த விவசாயிகளின் வாழ்வு நிலைகள், தாழ்வு நிலைக்குச் சென்றதால் தானே விவசாயிகளின் தற்கொலைகள் உயர்ந்து வருகின்றன. உற்பத்தியின் இருவகைச் செலவுடன், கூடுதலாக 50 சதம் சேர்த்து விலை நிர்ணயிக்க வேண்டும் என்று போராடி வருகிறார்கள். தாம் விளைவித்த பொருட்களை அரசே கொள்முதல் செய்திட, உத்தரவாதச் சட்டம் வேண்டும் என்று தானே போராடுகிறார்கள்.

இயற்கைப் பேரிடரான வெள்ளம், வறட்சி, பருவம் தவறிய மழையினால் ஏற்படும் இழப்பிற்கு, ஒன்றிய அரசு உரிய அளவு நிவாரணம் இவர்களுக்கு வழங்கியது உண்டா? என்ற கேள்விகள் நெடுங்காலங்களாக நீண்டு வருகிறதே!

இவர் கூறியபடி வேளாண் உற்பத்தி வளர்ச்சி கண்டிருக்கிறது. ஆனால், விவசாயிகள் வேளாண் வருமானத்தில் வீழ்ச்சியடைந்து, தன் நிலத்திலிருந்து வெளியேறி வருகின்றனர். இந்தியக் குற்றப் பதிவு ஆவணத்தின்படி, இதுவரை இரண்டரை லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனரே எதனால்? துணை ஜனாதிபதி இவைகளுக்கு விடை காண முயற்சிக்க வேண்டும். வெறும் பேச்சு வினையாற்றாது.

**பி.எஸ்.மாசிலாமணி**

# நூல் நயம்

## கலை இலக்கியமும் கலைஞர்களும் தோழர் ஜீவாவும்




இந்தியப் பொதுவுடமை இயக்கத்தின் தலைவர் ப.ஜீவானந்தம் அவர்கள் ஒரு அரசியல்வாதி, சட்டப்பேரவை உறுப்பினர், தொழிற்சங்க தலைவர் மட்டுமல்ல, மாறாக தமிழகம் அறிந்த ஒரு கலை இலக்கியவாதி. அதனால்தான் தமிழ் கூறும் நல்லுலகத்தால் இலக்கிய பேராசான் ஜீவா என்று அழைக்கப்படுகிறார். அவர் ஆற்றிய இலக்கியப் பணிகளும், அவர் அரவணைத்த கலை இலக்கிய ஆளுமைகளைப் பற்றிய ஒரு தொகுப்பே இந்நூல்.

ஜீவா காலத்தில் பொது உடைமை இயக்கம் மாபெரும் மக்கள் திரளைத் திரட்டும் ஆற்றல் பெற்ற ஒரு அமைப்பு. இவர்கள் அரசியல் துறைகளில் மட்டுமல்ல, இலக்கியத் துறைகளிலும் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த பி.சி.ஜோசி, இந்தியா முழுவதும் இருக்கிற கலை இலக்கிய ஆளுமைகள் எல்லாம் வசீகரித்து இயக்கத்தின்பால் ஈர்த்தார். மாபெரும் சமஸ்கிருதப் பண்டிதரான ராகுல் சங்கிரித்யாயன் கட்சியின் ஒரு இலக்கிய முகமாக விளங்கினார்.

தமிழ்நாட்டில் பல்வேறு கலை இலக்கிய ஆளுமைகள், இந்தியப் பொதுவுடமை இயக்கத்தில் பற்று உடையவர்களாக விளங்கினார்கள். குறிப்பாக திரை இசை பாடல்களில் ஒடுக்கப்பட்ட தொழிலாளர்களின் குரலை ஓங்கி ஒலித்த பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், எளிய மக்களின் துன்ப துயரங்களைத் தனது இசை மேடைகளில் பாடி பரப்பிய பாவலர் வரதராஜன், இலக்கியத்துறையில் முடிசூடா மன்னராக விளங்கிய ஜெயகாந்தன், நகைச்சுவை மன்னர் என்.எஸ். கிருஷ்ணன், மதுரம் இணையர் மற்றும் டி.கே.எஸ் சகோதரர்கள் இப்படி எண்ணற்றவர்களை ஈர்த்து, எளிய மக்களின் பிரச்சினைகளை, வாழ்வியல் சூழல்களை திரைப்படங்களில் பேசுவதற்கு ஊக்கமாகவும், ஆக்கமாகவும் இருந்தவர் ஜீவா என்பதை நாம் அறிவதற்கு இந்நூல் பெரிதும் உதவும்.

– இன்சுவை பாரதி

**நூலாசிரியர்** : கார்த்திகேயன்
**பக்கம்** : 152 விலை : 150
**வெளியீடு** : ராகுல்ஜி கல்வி அறக்கட்டளை, 233, வாசுகி நகர், 3வது தெரு, வள்ளுவர் காலனி, தபால் தந்தி நகர், மதுரை–625017

## முக்காலத்தின் முப்பால்




முக்காலத்தின் முப்பால் எனும் இந்நூல், நம்முடைய வள்ளுவப் பெருந்தகை முக்காலத்தையும் கணித்து, முப்பால் கொண்ட நூல் அளித்தார். அந்தத் திருக்குறளில் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒரு குறல் விதம், 133 அதிகாரத்தில் இருந்து ஒரு குறளைத் தேர்ந்தெடுத்து, படிப்பவர்களின் மனதில் எளிமையாக நிலைக்கும்படி, அதற்கு ஏற்ப படத்தோடு பதிவு செய்திருக்கிறார். உலகம் உள்ளவரை திருக்குறள் நமது உள்ளத்தில் பதிந்திருக்க இந்த முயற்சியில் அவர் ஈடுபட்டிருக்கிறார். அதோடு மட்டுமல்ல, திரைப்படங்களில் மற்றும் ஊடகங்களில் எல்லாம் திருக்குறள் எவ்வாறு உலா வந்திருக்கிறது என்பதையும் மேற்கோள் காட்டியுள்ளார்.

திருவள்ளுவருக்கு ஜாதி, மதம், மொழி, இனம் என்கின்ற எந்தவிதமான வேறுபாடுகளும் கிடையாது. அவருக்கு மனித குலம் அனைத்தும் ஒன்றே, அதனால்தான் அனைவருக்கும் ஏற்ற ஒரு நூலை அவர் படைக்க முடிந்தது. ஆனாலும் அவர் தமிழனாகப் பிறந்தார் என்பதால், தமிழர் என்கின்ற முறையில் நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டும். அப்படிப்பட்ட திருக்குறள் என்னும் அறநூலைப் பள்ளியில் படித்தும், மேடைகளில் பேசினால் மட்டும் போதாது. வாழ்வியல் நெறியாக ஒவ்வொரு தமிழனும் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்.

“இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றி யான்.
பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர் தொகுத்தவற்று லெல்லாம் தலை.
உறுபசியும் ஓவாப் பிணியும் செருபகையுஞ் சேரா தியல்வது நாடு.”

இந்த மூன்று குறள்களின் மூலமே வள்ளுவர் எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்று விரும்புகிறார். அப்படிப்பட்ட சமத்துவமான ஒரு நாட்டையே அவர் கட்டமைக்க விரும்புகிறார். வறுமை என்பது இருக்கக் கூடாது. எல்லாரும் எல்லா வளங்களையும் பகிர்ந்து கொண்டு வாழ்ந்தால் இங்கு பதுக்களும், சுரண்டலும் இல்லாது ஒழிந்து போகும், ஒரு சமத்துவம் ஆட்சி ஏற்படும் என்று சொல்லுகிற பாங்கு மிகவும் பாராட்டுக்குரியது. முப்பாலுக்கு அப்பால் எதுவும் இல்லை என்பது உண்மை. இதை இந்நூல் வலியுறுத்துகிறது.

– சமரன்

**நூலாசிரியர்** : கா.சுப்பையா
**பக்கம்** : 90 விலை : 125
**வெளியீடு** : ராகுல்ஜி கல்வி அறக்கட்டளை, 233, வாசுகி நகர், 3வது தெரு, வள்ளுவர் காலனி, தபால் தந்தி நகர், மதுரை–625017

# கல்லறைகள் மீது ரத்தக் கறை!

**இந்தியாவின் தொன்ம வரலாறு அமைதியாய்க் கடந்து போக மறுக்கிறது. அச்சுறுத்தும் பேய் என்பார்களே, அதுபோல வாழும் உயிர்களை, ஆத்திரம் தூண்டி, வாதப் பிரதிவாதங்களை உருவாக்கி, நமது அரசியல் பாதையைத் தன் வழியில் கொண்டுவந்து பயமுறுத்துகிறது.**

அறிஞர்கள் மத்தியிலும், கல்விப் பாட அறைகளிலும் விவாதிக்கப்பட வேண்டியவை இப்போது நீதிமன்றங்களிலும், சட்டமன்றங்களிலும் வன்முறை நிகழ்த்தப்படும் தெருக்களிலும், அரங்குகளிலும் நிற்கின்றன. தற்போது நடந்து கொண்டிருப்பது தங்கள் அரசியல் முடிவுகளை நோக்கி வரலாற்றை ஆயுதமாக்கிக் கொள்ளும் முயற்சிகளே! இது உடனடிக் கவனம் கொள்ள வேண்டியதும், சற்றுச் சிக்கலானதும் கூட.



மகாராஷ்டிர மாநிலத்தில் இப்போதைய பிரச்சினை, பொருளாதார நெருக்கடியோ, கட்டுமான வளர்ச்சியின் சிக்கல்களோ அல்ல. அது 1707 ஆம் ஆண்டு காலமான ஒரு முகலாய அரசனின் சமாதிதான்.

இப்பிரச்சினை இப்போது பற்றி எரிய காரணம், ‘சாவா’ எனும் ஒரு திரைப்படம். சத்ரபதி சிவாஜியின் புதல்வன் சம்பாஜியின் வரலாற்றுக் கதை சொல்லும் படம். இதன் 40 நிமிட இறுதிக் காட்சிகள், அவுரங்கசீப்பின் கைகளில் சம்பாஜி படும் கொடுமைகளைச் சித்திரவதைகளாக அணு அணுவாய்க் காட்டும் காட்சியமைப்பைக் கொண்டுள்ளது. விக்கி கௌஷல், அக்ஷய் கன்னாவின் உணர்ச்சி மேலிட வைக்கும் நடிப்புக் காட்சிகளின் பாதிப்பு திரையரங்கோடு நிற்காது, அந்தப் பாதிப்பு சமூக ஊடகங்கள், மகாராஷ்டிரா சட்டமன்றம் மற்றும் இப்போது வீதிகளுக்கும் வந்து எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. இவை பற்றி எழுப்பப்பட்ட விவாதங்கள் கலை, தொன்மம் பற்றி மிக மிகக் குறைவாகவும், குறியீடுகள், அதனால் எழும்பும் ஆத்திரங்களை அதிகம் அலசுவதாகவும் ஆகிவிட்டன.

சட்டமன்ற உறுப்பினர் அபு அஸ்மி அவர்கள் அவுரங்கசீப் பற்றிப் பரிவு காட்டியதாகக் ‘குற்றம்’ சாட்டப்பட்டுச் சட்ட மன்ற உறுப்பினர் பதவி யிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். மகாராஷ்டிராவிலுள்ள ‘குல்தாபாத்’திலுள்ள அவுரங்கசீப்பின் சமாதியை மராத்தா மன்னர்கள் சாம்ராஜ்ஜிய ஆட்சி நடைபெற்ற காலத்தின் போது கூட சிறிதும் பாதிப்பிற்குள்ளாகாத அவுரங்கசீப்பின் சமாதியை இடிக்க வேண்டும் என இந்துத்துவா வெறியர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். இஸ்லாமிய மதச் சின்னங்களைச் சேதப்படுத்தும் நிகழ்ச்சிகளும் நடந்தேற, நாக்பூரில் வன்முறை வெறியாட்டம் நடந்தது. ஒரு மனித உயிர் பலியானது.

இந்த வளையத்துள் வந்திருப்பது மகாரஷ்டிரா மட்டுமல்ல, உ.பி., ராஜஸ்தான் மற்றும் சில மாநிலங்களிலும் இது வெடித்துள்ளது. இவை மோதல்களாக வடிவெடுத்துள்ளன. மசூதிகள், கோவில்கள், தர்காக்கள், சமூகமே மறந்து போன அரசர்கள், மறைந்து போன வரலாற்றுக் குறிப்புகள் மீதே இந்த மோதல்கள் வெடித்துள்ளன. வாரணாசி யிலுள்ள கியான்வாபி மசூதி, சம்பாலிலுள்ள ஷாஹி ஜும்மா மசூதி மீதான நீதிமன்ற வழக்கு, அஜ்மீர் மொய்னுதீன் சிஷ்டி தர்கா மீதான அவதூறு பிரச்சாரம் இவை இப்போது பாதித்திருக்கும் நோயின் தீவிரத்தை வெளிக்காட்டுகின்றன. இன்றைய இந்தியா, நடப்பில் சந்தித்துக் கொண்டிருக்கும் இன்றியமையாத பிரச்சினைகளில் கவனமாக விவாதிக்காது, புராதனங்கள் மீதான பார்வையில் பிளவுண்டு நிற்கிறது. இது ஒன்றும் தற்செயல் நிகழ்வுத் தொடர்ச்சியல்ல. ஒரு திட்டமிட்ட செயல்பாட்டின் வெளிப்பாடே! “புதிய வழக்குகள் எதுவும் கிளப்பக் கூடாது” எனச் சொல்லி வழங்கப்பட்ட ‘அயோத்தி தீர்ப்பின்’ பின்னரும் கூட, பழைய வரலாற்று நிகழ்வுகளுக்குப் “பழி தீர்க்கும் “இயக்கம் முனைப்பு வேகம் கண்டுள்ளது. ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் கூட, இம்மாதிரி நிகழ்வுகள் முடிவுற வேண்டும் என்பதற்காக இப்படிக் கூறினார். “ஒவ்வொரு சிவலிங்கத்தின் கீழும் ஒரு மசூதியைத் தேடக் கூடாது”. எனினும் இந்த இயக்கங்களின் போக்கு அதையேதான் செய்கின்றது. வன்முறைத் தாக்குதல்கள், நீதிமன்ற வழக்குகள் இவற்றிலிருந்து வழிபாட்டுத் தலங்கள், வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கும் நோக்கோடு வந்த 1991 ஆம் ஆண்டுச் சட்டம் சொல்வதை எதிர்த்துச் சட்டப் போராட்டங்கள் கிளம்பியுள்ளன. இது குறித்த சட்ட பூர்வமான முடிவு இன்னும் எட்டப்படவில்லை.

ஆர்.எஸ்.எஸ் சின் செய்தித் தொடர்பாளர் சுனில் அம்பேத்கார் போன்றோர், “அவுரங்கசீப் பற்றிய விவாதங்கள் நடத்தப்படத் தேவையில்லை.” எனக் கூறினாலும், ஆர்.எஸ்.எஸ் சின் ஒட்டு அமைப்புக்களான விஎச்பி (விஸ்வ ஹிந்து பரிஷத்) போன்ற அமைப்புகள் இவற்றில் வெறியும் தீவிரமும் காட்டுகின்றன. விஎச்பி தலைவர் அலோக் குமார் கூறுகிறார்: “அவுரங்கசீப்பின் பெருமைப்படுத்தலை நாங்கள் எதிர்க்கின்றோம்.” அவுரங்கசீப் காலத்தில் அவரை எதிர்த்து நின்றவர்களின் நினைவுச் சின்னங்களைக் கட்டி எழுப்பும் பணியை விஎச்பி துவங்கியுள்ளது. இம்மாதிரியான குரல்களும், முயற்சிகளும் பல்வகைக் குழப்பங்களை, பிரச்சினைகளை உருவாக்கலாம். எனினும், இவ்வமைப்புகளில் உள்ளோர் சிலர் இவ்வாறு கூறுகின்றனர்: “பிரதமர் நரேந்திர மோடியின் ஐந்து தீர்மானங்களில் ஒன்றான,” அடிமைக்கால மனோபாவத்தின் ஒவ்வொரு குறியீட்டையும் துடைத்தெறியும் சங் பரிவாரின் கொள்கைத் திட்டத்தின் ஒரு பகுதியே இது.

இங்குதான் பிரச்சினையே எழுகின்றது. யார் சொல்லும் வரலாற்றை நாம் துடைக்கப் போகிறோம்? மேலும், ‘காலனிய மனோபாவம்‘ என்பதை யார் வரையறுப்பார்கள்? ஜனநாயகப் பன்முகத்தன்மையோடு ஒத்துப் போக முடியாத ‘நாகரிக அடையாளத்தை’க் கொண்டுவரும் வேட்கையா அது? ஒரு நவீன தேசமானது, இடைப்பட்ட நூற்றாண்டுகளில் நிகழ்ந்த அநீதிகளைச் சரி செய்ய மறந்து முன்னே செல்ல முடியுமா? இந்தக் கட்டுரை வெறுமனே முரண்பாடுகளைப் பட்டியலிடுவதல்ல. அது சில அடிப்படைக் கேள்விகளைக் கேட்கிறது. வரலாற்று நினைவுகளை அரசியலுக்கான எரிபொருளாக்கினால், அது உடன் பற்றியெரியும் தீவிரம் பெறுகிறது. பழைய அடையாளங்கள் எவ்வளவு சுலபமாக இன்றைய நாளின் தூண்டலுக்கான கருவிகளாகின்றன என்பதை நாம் கண்டு கொண்டுதான் இருக்கிறோம்.

ஒரு சமூகம் என்ற முறையில், நாம் நமக்குள் கேட்டுக்கொள்ள வேண்டியது, நமது எதிர்காலத்திற்கானவற்றிற்காகச் செயல்படப் போகிறோமா அல்லது முந்திய பல நூற்றாண்டுகளின் கணக்குகளைத் தீர்க்க நம்மை அடகு வைத்துக் கொள்ளப் போகிறோமா? என்பதுதான். உலகின் மிகவும் வளர்ந்த பொருளாதார நாடுகளில் ஒன்றாக மாறும் பாதையில் இந்தியா இருக்கிறது. ஆனால், கலாச்சாரக் கணக்குதீர்க்கும் சண்டைகளில் தேசத்தின் சக்தி முழுதும் செல்ல ஆரம்பித்தால் உண்மையான வளர்ச்சி எதுவும் இங்கே நிகழாது. வரலாறு வளைந்து கொடுக்கும் தன்மை கொண்டது. நாம் அதை அனுமதித்தால் மட்டுமே. “கடந்த காலத்தைப் பற்றியே நினைவு மூழ்கியோர் தம் எதிர்காலத்தைப் பறிகொடுப்பார்கள்” எனச் சொல்வார்கள். இந்த உண்மையை மறந்த தேசமாக ஆகாதிருக்க உறுதி செய்வோம்.

அருண் பூரி
தமிழில்: ராமானுஜம்
நன்றி: இந்தியா டுடே

செந்தில் பாலாஜி வழக்கில்

# தனிமனித உரிமைகளைத் தடுக்கும் உச்சநீதிமன்றம்



மே.து.ரா.

**வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை வழங்கி ஆளுநர்களின் செயல்பாடுகளை வரையறை செய்த உச்ச நீதிமன்றம், தனி மனித உரிமைகளைத் தடுக்கின்ற மற்றொரு தீர்ப்பையும் அடுத்து வழங்கியிருப்பது வியப்புதான்.**

தமிழ்நாடு அரசின் வழக்கில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவைகளின் மேன்மையினை உறுதிப்படுத்தி, ஆளுநர்களின் அத்துமீறல்களை அடக்கி வைத்த உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் நிறைவிலும் மகிழ்விலும் திளைத்திருக்கும்போதே மற்றொரு தீர்ப்பு எதிர்மறையாகக் கிடைப்பது எதிர்பாராததுதான்.

தமிழக அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜிக்குப் பிணை வழங்குவது தொடர்பாக உச்சநீதிமன்றம் முன்னெடுத்த வினாக்கள் முழுமையாக மக்களாட்சி நடைமுறைகளுக்கு மாறானவை.

தவறு செய்தோர் யாராக இருப்பினும், அது ஊழல் குற்றச்சாட்டாக இருந்தாலும் அல்லது வேறு வகைப்பட்ட குற்றச்செயலாக இருந்தாலும் தொடர்புடையோர் தண்டிக்கப்படவேண்டும் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஒருவருடைய தவறுகளையும் முறைகேடுகளையும் மறைக்கவோ அல்லது காப்பாற்றவோ எடுக்கப்படும் முயற்சிகள் என்று எதையும் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

அமைச்சர் பொறுப்பில் தொடர்வதையும் பிணை தருவதையும் இணைத்துப் பார்க்கின்ற உச்ச நீதிமன்றத்தின் பார்வையே அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைகளுக்குப் பொருந்தாததாகும்.

குறிப்பிட்ட அமைச்சர், போக்குவரத்து ஊழியர் தேர்வு தொடர்பான ஊழல் குற்றச்சாட்டில் 471 நாள்கள் சிறையில் கழித்திருக்கிறார். அவருடைய பிணை வேண்டுகோள் 58 முறை பல்வேறு மட்ட நீதிமன்றங்களில் மறுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அவருக்குப் பிணை தருவதற்கு அமைச்சர் பொறுப்பில் நீடித்திருப்பது தடையாக இருப்பது போன்ற தோற்றத்தினை உச்ச நீதிமன்ற நீதியர்கள் ஏற்படுத்தியிருந்தனர். இதனால், வேறு வழியின்றி அமைச்சர் பொறுப்பிலிருந்து விலகிய அவர் பிணையில் வெளியே வந்தார்.

முன்னர் தண்டிக்கப்பட்டிருந்த மற்றொரு தமிழக அமைச்சர் பொன்முடி வழக்கில், அவரது தண்டனை நிறுத்திவைக்கப்பட்டு, அவர் சட்டப்பேரவை உறுப்பினராகத் தொடரும் வாய்ப்புக் கிடைத்தது. இருப்பினும், தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால், சட்டப்பேரவை உறுப்பினராகத் தொடர்ந்ததால் அவரை அமைச்சராக அமர்த்த முதலமைச்சர் பரிந்துரைத்தார். இதற்குத் தமிழ்நாடு ஆளுநர் மறுப்புத் தெரிவித்தார்.

அப்போது உச்ச நீதிமன்றம் தலையிட்டு, தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால் சட்டப்பேரவை உறுப்பினராகத் தொடரும் ஒருவருக்கு அமைச்சர் பொறுப்பைத் தருவது முதலமைச்சரின் தனியுரிமையாகும் என்று கூறி, பொன்முடி மீண்டும் அமைச்சர் பொறுப்பேற்க வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தது.

இந்த முன்னெடுத்துக்காட்டினை வைத்துக்கொண்டு, பிணையில் வந்திருந்த செந்தில் பாலாஜிக்கு அமைச்சர் பணி வழங்கப்பட்டது. அவரைப் பிணையில் விடுவித்தபோது, அமைச்சர் பொறுப்பு ஏற்கக்கூடாது என்ற தடை எதையும் உச்ச நீதிமன்ற எழுத்தளவில் குறிப்பிடவில்லை.

ஆனால், தற்போது உச்ச நீதிமன்றம் அமைச்சர் பொறுப்பேற்றதைத் தவறு எனக் கூற முற்படுகிறது. அமைச்சராக அவர் இல்லை என்பதால்தான் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது என்று புதிய விளக்கம் தருகிறது உச்ச நீதிமன்றம். அமைச்சர் பொறுப்பா அல்லது பிணையா என்ற வினாவினை எழுப்பி, இரண்டில் ஒன்று எனக் கட்டளையிட்டு, அமைச்சர் விலகவேண்டிய நிலையினை ஏற்படுத்தி இருக்கிறது.

குற்றச்சாட்டு ஒன்றில் தளைப்படுத்தப்பட்ட ஒருவருக்குப் பிணை வழங்கும்போது அடிப்படையாகச் சில கட்டுப்பாடுகளை வரையறுப்பது நீதிமன்றங்களின் வழக்கமாகவே உள்ளது.

1. சான்றாவணங்களை அழிக்கக்கூடாது.

2. நேரிடையாக வழக்கில் தொடர்பான சாட்சிகளை அச்சுறுத்தித் தடுக்கக்கூடாது.

3. வழக்கிலிருந்து தப்பிக்கத் தலைமறைவாகிவிடக்கூடாது.

4.காவல் நிலையத்தில் குறிப்பிட்ட நாள்கள் வரை கையொப்பமிடவேண்டும்.

5. குறிப்பிட்ட நாள்கள் வரை வேறு ஊரொன்றில் தங்கிக் காவல் நிலையத்தில் கையொப்பமிடவேண்டும்.

என்பன போன்ற சில கட்டுப்பாடுகள் வழக்கமாக இருப்பவைதாம்.

இவற்றுக்கு மாறாக, குறிப்பிட்ட பொறுப்பை ஏற்கக்கூடாது என்று கட்டுப்படுத்துவதும் கட்டளையிடுவதும் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களுக்கு முற்றிலும் புறம்பானவையாகும்.

குற்றம் உறுதிப்படாமல் இருக்கும்போது, வழக்கு முடிய பல்லாண்டுகள் ஆகலாம் என்கின்ற சூழலில், சிறையில் 471 நாள்கள் அடைத்திருந்ததும் 58 முறை அவரது விடுதலையை மறுத்ததும் மனித உரிமை மீறல் மட்டுமல்லாது, தனி மனித வாழ்வை ஒடுக்குவதாகவே ஆகிறது. இதனை உச்ச நீதிமன்றம் கண்டு கொள்ளவில்லை.

அடிப்படையில் இந்திய ஒன்றியத்தின் குடிமகனாக அவர் இருக்கிறார். அந்த முறையில் அவருக்கு வாக்குரிமையும் வழங்கப்பட்டுள்ளது. வாக்காளர் என்ற அளவில் பிற தகுதிகளைப் பெற்றுத் தேர்தலில் நின்று மக்கள் ஏற்பினால் சட்டப்பேரவை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

சில நடைமுறைச் சிக்கல்களால் சிறையில் இருப்போருக்கு வாக்குரிமை வழங்குவதைச் சட்டங்கள் ஏற்கவில்லை. ஆனால், பிணையில் வந்த ஒருவருக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுவதில்லை. இதைப் போன்றே குற்றம் உறுதிப்படாமல், பிணையில் இருக்கும் ஒருவர், தேர்தலில் நிற்பதும் இந்திய அரசமைப்பில் தடுக்கப்படவில்லை.

இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு உச்ச நீதிமன்றமும் தேர்தல் ஆணையமும் பல முயற்சிகளை மேற்கொண்டபோதிலும், சட்ட வடிவம் பெறுகின்ற சூழல் இதுவரை ஏற்படவில்லை.

ஒருவரைப் பிணையில் விடுவிக்கும்போது, அவர் அடுத்து வரும் தேர்தலில் வாக்களிக்கக்கூடாது என்று எவரையும் கட்டுப்படுத்த இயலாது. இதைப் போன்றுதான், பிணையில் வெளிவந்த ஒருவர் சட்டப்பேரவை உறுப்பினராக இருக்கும்போது, அமைச்சர் போன்ற பொறுப்புக்களை ஏற்கக்கூடாது என்று கட்டுப்படுத்தவும் முடியாது. இவற்றுக்கு மாறாகச் செயல்படுவது, அரசமைப்புச் சட்டம் தந்திருக்கின்ற அடிப்படை உரிமைகளை மறுப்பதில் முடிந்துவிடும்.

சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவருக்கு அமைச்சர் பொறுப்புத் தருவது முதலமைச்சரின் தனியுரிமையாகும். இதில் தலையிட உச்ச நீதிமன்றம் உள்ளிட்ட எந்த அமைப்புக்கும் உரிமை கொடுக்கப்படவில்லை.

விடுதலை அடைந்த பின்னர், கடந்த பல நிகழ்வுகளில் உச்ச நீதிமன்றமே முதலமைச்சர்களின் இந்த அடிப்படை உரிமைகளை நிலைநாட்டியிருக்கிறது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இவை யாவற்றுக்கும் மேலாக, சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவர் அமைச்சராக இருக்கக்கூடாது என்று கட்டுப்படுத்த உச்சநீதி மன்றத்துக்கு உரிமை கொடுத்தது யார்? என்றுதான் புரியவில்லை.





குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தானாகவோ அல்லது முதலமைச்சரின் வேண்டுகோளின் அடிப்படையிலோ பொறுப்பில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வது என்பது வேறு, விலகவேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிடுவது வேறு. எழுதப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் அல்லாமல், வாய்மொழியாக அமைச்சர் பொறுப்பா? சிறையா? என்று மிரட்டல் விடுத்து அடிபணியச் செய்வதற்கு எந்தச் சட்டத்தில் இடம் தரப்பட்டுள்ளது? என்பதை உச்ச நீதிமன்றம்தான் விளக்கவேண்டும்.

நீதிமன்ற வழக்காகக்கூட அல்லாமல், விசாரணை ஆணையம் அமைக்கப்பட்ட நிலையிலேயே தங்கள் அமைச்சுப் பொறுப்புகளை விட்டு விலகியோர் இந்திய ஒன்றியத்தின் அரசியலில் இதுவரை விலக்காக இருவரைத் தவிர வேறு பிறர் பெரிதும் இல்லை என்றே கூறலாம்.

ஆனால், விசாரணை ஆணையம் அமைக்கப்பட்ட பின்னரும் பஞ்சாபில் பிரதாப் சிங் கைரோன், கேரளத்தில் சங்கர், ஆந்திரத்தில் என். சஞ்சீவ ரெட்டி, கர்னாடகத்தில் நிசலிங்கப்பா போன்றோர் முதலமைச்சர் பதவிகளில் தொடர்ந்தனர்.

அயோத்தி மசூதி இடிப்பு வழக்கில் தளைப்படுத்தப்பட்டுப் பிணையில் வெளிவந்த பின்னர் எல்.கே. அத்வானி ஒன்றிய உள்துறை அமைச்சராகவும் உமா பாரதி மத்தியப் பிரதேச முதலமைச்சராகவும் பொறுப்பேற்றுச் செயல்பட்டனர்.

குசராத் கலவரங்கள் தொடர்பான வழக்குகளில் பிணையில் வந்த இன்றைய உள்துறை அமைச்சர் அமித்சா மேல் இன்னும் சில வழக்குகள் முடியாமல் இருக்கின்றன.

பல்லாயிரம் கோடிகளில் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்டுச் சிறை சென்ற செயலலிதா பிணையில் வெளிவந்தவுடன் இரண்டு முறை முதலமைச்சர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். தேர்தல் பரப்புரைகளிலும் கலந்துகொண்டார். அப்போது எவரும் அவரைத் தடுக்கவில்லை.

அண்மையில் தில்லி முதலமைச்சராக இருந்த அரவிந்த் கேச்ரிவால், துணை முதலமைச்சர் சிசோதியா போன்றோர் சிறையில் அடைக்கப்பட்டபோது பிணை வழங்க அமைச்சர் பொறுப்பினைத் துறக்கவேண்டும் என்பது வற்புறுத்தப்படவில்லை.

கேச்ரிவால் 2024 நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் பரப்புரைக்காக மட்டும் சில நாள்கள் விடுவிக்கப்பட்டார். ஆனால், உடல் நலம் கருதிப் பிணையில் வெளிவந்திருந்த அரியானா முன்னாள் முதல்வர் ஓம் பிரகாசு சவுதாலா தேர்தல் பரப்புரை செய்யக்கூடாது என்று உச்ச நீதிமன்றத்தால் தடுக்கப்பட்டார்.

இதுவரை பிணையில் வந்தோர் எவருக்கும் இல்லாத ஒரு புதிய கட்டுப்பாட்டினையும் தடையினையும் உச்சநீதிமன்றம் வகுத்திருப்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லைதான்.

இன்றைய பாரதிய சனதாக் கட்சி அரசு, எதிர்க்கட்சி மாநில முதல்வர்கள், அமைச்சர்கள், இன்ன பிற கட்சித் தலைவர்கள் போன்றோரைப் பழிவாங்கவும் முடக்கவும் முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது. ஒன்றிய அரசின் வருமான வரிப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு, வருவாய் புலனாய்வு இயக்குநரகம் என்பன போன்ற பல அமைப்புகளை வைத்துக்கொண்டு, மாநில அரசுகளின் ஒப்புதல் பெறாமலேயே நடவடிக்கைகள் மேற்கொள்வதும் மேல்மட்டத் தலைவர்களைச் சிறைப்படுத்துவதும் அன்றாட நடைமுறைகளாகிவிட்டன.

இவர்களது செயல்பாடுகளில் 95% வழக்குகள் வெற்றி பெறுவதில்லை அல்லது நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதில்லை. அச்சுறுத்தி அடக்கி வைக்கவும் முன்னெடுத்து முடக்கி வைக்கவும் கருவிகளாக அவை பயன்படுத்தப்படுகின்றன. மராட்டியத்தின் துணை முதல்வர் அசித் பவர் போன்று ஒன்றிய அரசில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்கள் மீதான வழக்குகள் கைவிடப்படுகின்றன. பா.ச.க. கூட்டணிக் கட்சியினரின் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதே இல்லை. 100% வழக்குகள் வேண்டாத கட்சிகள் மேல்தான் தொடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றுக்கெல்லாம் உறுதுணையாக உச்ச நீதிமன்றமும் உயர்நீதிமன்றங்களும் செயல்படுகின்றனவா? என்ற அய்யம் மக்களிடம் தோன்றி வருவதை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இந்த நிலையில், குற்றவாளிகளுக்குத்தான் தண்டனை, குற்றம் சாட்டப்படுவோருக்கு அல்ல என்பதை உச்ச நீதிமன்றம்கூடப் புறக்கணித்து வருவது அச்சத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

விடுதலைவாய்ப்புஉண்டுஎன்றநிலையில் உள்ள வழக்குகளில், பிணை தரும்போது போடப்படுகின்ற கட்டுப்பாடுகள், நீண்ட காலத் தண்டனையாக மாறிவிடக்கூடாது.

தில்லி, சார்கண்டு ஆகிய மாநிலங்களின் முதல்வர்கள் பிற அமைச்சர்கள் ஆகியோர் மீது ஊழல் குற்றச்சாட்டு என்ற பெயரில் சிறையில் தள்ளப்பட்டனர் என்பதை எவரும் மறந்துவிடவில்லை.

சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவர் அமைச்சராகலாம் என்பது அரசியலமைப்புச் சட்டம் வகுத்துத் தந்திருக்கின்ற உரிமையாகும். இதை உச்ச நீதிமன்றத்தின் கட்டுப்பாடுகளும் கட்டளைகளும் பறித்துவிடக்கூடாது.

செந்தில் பாலாஜி வழக்கில் உள்ள உண்மைகளை நீதிமன்றங்கள்தான் கண்டுபிடிக்க முடியும். ஆனால், சட்டப்பேரவை உறுப்பினராக உள்ள அவர் அமைச்சராகக்கூடாது என்று உச்சநீதிமன்றம் தடுப்பது முன்னெடுத்துக்காட்டாக மாறி விடக் கூடாது என்பதே மக்கள் நலனில் பொறுப்புக் கொண்டோர் கவலையாகும்.

தங்களுக்கு எதிராக இருக்கின்ற அரசியல் தலைவர்கள் மேல் வழக்குகளைப் போட்டு நீண்ட நாள்கள் சிறையில் தள்ளுவதையும் பிணை தரும்போது பதவி வாய்ப்புகளைப் பறிப்பதையும் பா.ச.க. பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பளித்துவிடக்கூடாது. இவற்றுக்கு உச்ச நீதிமன்றமும் துணை போய்விடக்கூடாது.

தொடர்புக்கு : 9444075561

ஊரக வளர்ச்சித் துறை தொழிலாளர்கள்

# பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்








ஊரக வளர்ச்சித் துறை தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் பணி நிரந்தரம் செய்திட வேண்டும். அரசுப் பள்ளி தூய்மைப் பணியாளர்களுக்கு அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**ராமநாதபுரம்:** ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக முன்பாக, மாவட்ட தலைவர் பி.ஆறுமுகம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் பி.கிருஷ்ணசாமி சிறப்புரை ஆற்றினார். மாவட்டச் செயலாளர் நவநீதகிருஷ்ணன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தினகரன், பொருளாளர் சாந்தி, ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் என்.கே.ராஜன், கட்சியின் மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பெருமாள் உள்ளிட்ட பலர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

**திருச்சி:** தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை தொழிலாளர் சங்கம் சார்பில், திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில், மாநிலம் தழுவிய கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம், மாவட்ட தலைவர் எம்.ஆர்.முருகன் தலைமையில் நடைபெற்றது.

**தூத்துக்குடி:** தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர்கள் தூத்துக்குடியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, சங்கத்தின் மாவட்டச் செயலாளர் அஸ்வின் ரவிந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட தலைவர் கிருஷ்ணராஜ், செயலாளர் லோகநாதன், பொருளாளர் பாலசிங்கம், கட்டுமான சங்க மாவட்டச் செயலாளர் சுப்ரமணியன் எஸ்.பி.ஞானசேகர், மாமன்ற உறுப்பினர் தனலெட்சுமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# 100 நாள் வேலைக்கு 5 மாதச் சம்பளப் பாக்கியைக் கேட்டு ஆர்ப்பாட்டம்




விருதுநகர் மாவட்டம் சாத்தூர் ஒன்றியம், ஒத்தையால் ஊராட்சியில் 100நாள் வேலை செய்த தொழிலாளர்களுக்கு 5 மாதமாகச் சம்பளம் வழங்கப்படவில்லை. இதைக் கண்டித்தும், உடனே சம்பளம் வழங்கக் கோரி, விதொச சார்பில் ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பு, கிளைச் செயலாளர் சங்கிலி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சிபிஐ மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், வட்டச் செயலாளர் சாமிநாதன், நகரச் செயலாளர் ஜான்ராஜா ஆகியோர் பேசினார்கள். **கோவில்பட்டி:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவில்பட்டி தாலுகா குழு சார்பில், வட்டார வளர்ச்சி அலுவலகம் அருகே தாலுகா செயலாளர் பாபு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட மந்தித்தோப்பு, பாண்டவர்மங்கலம், இனாம் மணியாச்சி, இலுப்பையூரணி, திட்டங்குளம், மூப்பன்பட்டி, நாலாட்டின்புதூர் ஆகிய 7 ஊராட்சிகளில் உடனடியாக 100 நாள் வேலையைத் தொடங்க வேண்டும். சம்பளப் பாக்கியை உடனடியாக வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வட்டார வளர்ச்சி அலுவலரிடம் மனு அளித்தனர்.

# மாமேதை லெனின் 156வது பிறந்த நாள்

மாமேதை லெனின் அவர்களின் 156வது பிறந்த நாள் விழா, கட்சி மாவட்ட அலுவலகத்தில், மாவட்டக் குழு உறுப்பினர் பழக்கடை செல்வம் தலைமையில் நடைபெற்றது. இதில் சிபிஐ தேசியக் குழு உறுப்பினர் கிருஷ்ணதேவ் சிங் சிறப்புரையாற்றினார். வங்கி ஊழியர் சங்க தலைவர் காளிமுத்து, நகரச் செயற்குழு உறுப்பினர் வீ.தர்மதாஸ், மாவட்டக் குழு உறுப்பினர் மாரிமுத்து, தொலைபேசி ஊழியர் சங்க குணசேகரன், மகாலிங்கம், கட்சி ஒன்றியச் செயலாளர் நாகராஜன், விவசாயச் சங்க ஒன்றியச் செயலாளர் தியாகராஜன், ஏஐடியுசி மாவட்ட தலைவர் ஜே.குணசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய, நகர கிளை மாநாடுகள்










**மணிகண்டம் ஒன்றிய மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மணிகண்டம் ஒன்றிய 4வது மாநாட்டுப் பேரணி 27.4.2025 அன்று, ஒன்றியச் செயலாளர் எம்.ஆர்.முருகன் தலைமையில் நடைபெற்றது. பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் வை.செல்வராஜ் எம்.பி சிறப்புரையாற்றினார். மத்தியக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளர் க.சுரேஷ் எம்.சி, மாவட்டச் செயலாளர் எஸ்.சிவா, ஏஐடியூசி மாவட்டப் பொருளாளர் ஜி.ராமராஜ், மாநகர் மாவட்டத் துணைச் செயலாளர் சி.செல்வகுமார், மாதர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.அஞ்சுகம் ஆகியோர் உரையாற்றினர்.

பின்னர் நடைபெற்ற மணிகண்டம் ஒன்றிய மாநாடு சோமரசம்பேட்டையில் மருதாம்பாள், மேகராஜ், நிர்மலா ஆகியோர் தலைமையில், மாநாட்டுக் கொடியினை மாவட்டத் துணைச் செயலாளர் சி.செல்வகுமார் ஏற்றினார். இளைஞர் பெருமன்ற ஒன்றியச் செயலாளர் ஏ.இன்னசென்ட் விமலா மேரி வரவேற்புரையாற்றினார். மாநாட்டைத் துவக்கி வைத்து மத்திய கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் உரையாற்றினார். ஏஐடியுசி மாவட்ட தலைவர் வே.நடராஜா, மாவட்டப் பொருளாளர் ஜி.ராமராஜ் மாநாட்டை வாழ்த்தி உரையாற்றினார்கள். மாநாட்டில் ஒன்றியச் செயலாளராக எம்.ஆர்.முருகன் தேர்வு செய்யப்பட்டார். மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.சிவா நிறைவுரையாற்றினார்.

2019ல் துறைக்குடியில் 128 தொழிலாளர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டு மனைப் பட்டாவை கிராமக் கணக்கிலும், ஆன்லைனிலும் ஏற்ற வேண்டும். நிலுவையில் உள்ள 123 தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச இடமும், பட்டாவும் வழங்க வேண்டும். இல்லையேல் வரும் 27.5.2025 அன்று ஸ்ரீரங்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில், நாகை நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினருமான வை.செல்வராஜ் தலைமையில் குடியேறும் போராட்டம் நடத்துவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**சிவகிரி நகர மாநாடு:** தென்காசி மாவட்டம் சிவகிரியில், கட்சியின் 35வது நகர மாநாடு அ.கருப்பையா, பி.அருணாசலம், க.சண்முகவடிவு தலைமையில் நடைபெற்றது. கொடியை மூத்த தோழர் நடராஜன் ஏற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.வேலாயுதம் துவக்கவுரை ஆற்றினார். நகரச் செயலாளராக பி.பாலசுப்பிரமணியன், துணைச்செயலாளராக கா.குருவு, பி.அருணாசலம், பொருளாளராக வி.ராஜேந்திரன் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்டச் செயலாளர் த.இசக்கித்துரை நிறைவுரை ஆற்றினார்.

**விருதுநகர் நகர மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர், நகர மாநாடு மாவட்ட அலுவலகத்தில் நகரச் செயலாளர் காதர்முகையதின் தலைமையில், மூத்த தோழர் ஆதிமூலம் கொடி ஏற்றி வைத்தார். மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன், ஒன்றியச் செயலாளர் சக்கணன் ஆகியோர் பேசினார்கள். நகரச் செயலாளராக பாண்டியன், துணைச் செயலாளர்களாக மாரியப்பன், நாராயணசாமி, பொருளாளராக மாரீஸ்வரி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டார்கள்.

**வாசுதேவநல்லூர் ஒன்றிய 25வது மாநாடு:** தலைமை கே.சீதாராமன், சே.ஜெயகணேசன், பால் தாய் கொடி ஏற்றியவர் எம்.ஏஜையா சிறப்புரை மு.கண்ணகி சிபிஐ தேசியக் குழு உறுப்பினர் த.இசக்கித்துரை சிபிஐ மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா விதொச மாவட்டச் செயலாளர் விசதுணை மாவட்ட தலைவர் பி.ரவிக்குமார் மாதர் சங்க தலைவர் எஸ்.பாக்கியம் மாதர்சங்க துணைத் தலைவர் சிவகுரு மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆர்.சமுத்திரகனி, பி.சிங்காரவேலு மற்றும் குரு, சின்னவேல்சாமி எம்.வேலுச்சாமி, எம்.கோட்டியப்பன், பா.ஜெய கணேசன், ஆர்.சிவஞானம், எஸ்.சித்திரபுத்திரன் எஸ்.பாலசுப்பிரமணி கலந்து கொண்டனர்.

ப.வேலு செயலாளர் த.பால விநாயகம் துணைச் செயலாளர் எஸ்.சீனிவாசன் பொருளாளர் தேர்வு செய்யப்பட்டனர்.

**வி.பி.சிங் நகர்:** திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியம் வி.பி.சிங் நகர் கிளை மாநாட்டுக் கொடியை மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பி.வி.செந்தில் ஏற்றினார். மாநாட்டை மாவட்ட நிர்வாக உறுப்பினர் என்.எஸ்.பிரதாப் சந்திரன் தொடங்கி வைத்தார். முன்னாள் மாவட்டக் குழு உறுப்பினர் ஜி.பாலன் மற்றும் கே.போஸ் வாழ்த்தி பேசினர். இதில் கிளைச் செயலாளாராக ஆர்.பஞ்சநாதன், துணைச் செயலாளராக வேலுச்சாமி, பொருளாளராக பாலாஜி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**துரோபதை அம்மன் நகர்:** சோழவரம் ஒன்றியம் துரோபதை அம்மன் நகர் கிளை மாநாட்டுக் கொடியை, மாவட்டக் குழு உறுப்பினர் ஜி.பாலன் ஏற்றினார். மாநாட்டை விதொச மாவட்ட துணைச் செயலாளர் எம்.பி.குமார் தொடங்கி வைத்தார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பி.வி.செந்தில், என்.எஸ்.பிரதாப் சந்திரன் வாழ்த்திப் பேசினர். இதில் கிளைச் செயலாளராக ரமேஷ், துணைச் செயலாளராக நசிரா, பொருளாளராக கவிதா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். ஆர்.சிவசங்கரி நன்றி கூறினார்.

**திருச்சி 27 வது வார்டு:** திருச்சி 27 வது வார்டு கிளை மாநாட்டிற்கு எல்.பழனிபாரதி தலைமை வகித்தார், மூத்த தோழர் மஜித் கொடி ஏற்றினார். மேற்குப் பகுதிச் செயலாளர் இரா.சுரேஷ் முத்துசாமி, துணைச் செயலாளர் க.முருகன் அரசியல் உரையாற்றினார். இதில் கிளைச் செயலாளராக எஸ்.ரஹீம்கான், துணைச் செயலாளர்களாக என்.எஸ்.பாட்ஷா, என்.ராமச்சந்திரன், பொருளாளராக நல்லு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# ஏஐடியுசி கட்டிடத் தொழிலாளர் சங்க மாநில நிர்வாகக் குழு கூட்டம்



தமிழ்நாடு ஏஐடியுசி கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் மாநில நிர்வாகக் குழு, மாவட்டச் செயலாளர் கூட்டம் சென்னை ஏஐடியுசி அலுவலகத்தில் மாநிலத் தலைவர் கே.இரவி தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச் செயலாளர் ம.ராதாகிருஷ்ணன் துவக்க உரையாற்றினார். இரங்கல் தீர்மானத்தை இரா.துரைசாமி முன்மொழிந்தார். மாநிலப் பொதுச்செயலாளர் கோவை என்.செல்வராஜ் கூட்டத்தில் விவாதிக்கும் பொருள்களை முன்வைத்து உரையாற்றினார். துணைப் பொதுச் செயலாளர் எம்.முனுசாமி அமைப்பு நிலை முடிவுகளை விளக்கினார். கூட்டத்தில் மாநிலப் பொருளாளர் இரா.முருகன், மாநிலச் செயலாளர்கள் ஆர். தில்லைவனம், தூத்துக்குடி சேது, திண்டுக்கல் ஜி.பாலன், சி.நந்தினி, துணைத் தலைவர் ஏ.எஸ்.சங்கர் மேஸ்திரி மற்றும் மாவட்டச் செயலாளர் பங்கேற்றனர்.

நீதிமன்ற உத்தரவைக் காட்டி கொடியேற்று விழாவிற்கு எதிர்ப்பு வந்தால், ஒவ்வொரு கட்டடத் தொழிலாளியின் வீட்டிலும் கொடியேற்றி, மே தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மே5 காரல் மார்க்ஸ் பிறந்த தினத்தில், தமிழ்நாடு முழுவதும் குறைந்தபட்ச ஊதியத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, ஏஐடியூசி நடத்தும் ஆர்ப்பாட்டத்தில் கட்டடத் தொழிலாளர்கள் பெருமளவில் பங்கேற்க உள்ளனர்.

அகில இந்திய அளவில் அனைத்துத் தொழிற்சங்கங்கள் எடுத்த முடிவு அடிப்படையில், மே 20 பொது வேலை நிறுத்தம் வெற்றி பெற, நமது சங்கத்தின் சார்பில் கட்டுமானத் தொழிலாளர்கள் வேலை நிறுத்த மறியல் போராட்டத்தில் பெருமிளவில் பங்கேற்பது என முடிவு செய்யப்பட்டது.

'திரும்பவும் திரும்பவும் பிறப்பேன்' என்று அவர் கூறும்போது பிறந்து என்ன செய்யப் போகிறீர்? என்ற கேள்வி எழக் கூடாதே! எனவே 'இங்கு தீமைகள் யாவையும் வேரற அறுப்பேன்' என்று அடுத்த வரியில் கூறிவிட்டு, கவிதையைத் தொடர்கிறார்.

# திரும்பவும் திரும்பவும் பிறப்பேன்



ஆ.சிவசுப்பிரமணியன்

இவ்வுலகில் மனிதனாக வாழ்ந்து இறந்து போன ஒரு மனிதனின் உடலை எரித்தோ புதைத்தோ அதற்கு முடிவுகட்டிவிடுவது உலக மரபு. திருமூலர், 'பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச் சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே' என்றார்.


தற்போது மருத்துவ மாணவர்களின் உடற்கூறியல் ஆய்வுக்கு (Anatomy) உதவட்டும் என்று மருத்துவக் கல்லூரிக்குத் தம் பிணத்தைக் கொடையாக வழங்கும் நல்ல மரபு உருவாகியுள்ளது. இவ்வாறு எதோ ஒரு வழிமுறையில், இறந்தவரின் உடலுக்கு ஒரு தீர்வு கிடைத்து விடுகிறது. இத்தீர்வுக்கு எவரது பிணமும் தப்புவதில்லை. 'முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு' என்பது பரவலாக அறிமுகமாகியுள்ள தொடர்.

இவ்வாறு உடல் அழிக்கப்பட்டவுடன் அந்தமனிதனின் வாழ்க்கை முடிவடைவதில்லை என்ற கருத்தும் உண்டு. இக்கருத்துடையோர் மனித உடலை 'ஸ்தூல சரீரம் '(கண்ணுக்குப் புலப்படும் உடல்) 'சூக்கும சரீரம்' (கண்ணுக்குப் புலப்படா உயிர்) என்று இரண்டாகப் பகுத்துக் கூறுவர்.

இறப்பு நிகழ்ந்த பின்னர் எரித்தோ புதைத்தோ உடல் அழிக்கப்பட்டாலும் சூக்குமசரீரம் வாழும் என்ற நம்பிக்கை உண்டு. தன் வாழ்நாளில் செய்த பாவபுண்ணியங்களுக் கேற்ப அடுத்து ஒரு பிறவி சூக்கும சரீரத்திற்குக் கிட்டும். இது ஒரு சுழற்சியாக நிகழ்ந்து கொண்டே இருக்கும். இப்படி அடுத்தடுத்து அடையும் பிறவியே மறுபிறவி ஆகும்.

திருமாலின் அவதாரங்கள் பத்துதான். என் பிறப்போ எண்ணமுடியாத எண்ணிக்கை உடையது. அதனால் உன்னிலும் உயர்ந்தவன் என்று காளமேகப்புலவர் நிந்தாஸ்துதியாகப் (பழிப்பது போல் புகழ்தல்) திருமாலை நோக்கிப் பாடியுள்ளார்.

## தொ.மு.சி. நூற்றாண்டு



வள்ளுவர் பிறவியை ஒரு பெருங்கடலுடன் ஒப்பிட்டு இறைவனது பாதங்களைப் பற்றிக் கொண்டவர்களால்தான் இதை நீந்திக் கடக்க முடியும் என்கிறார்.

இவ்வாறு பிறப்பு இறப்பு மறுபிறப்பு என்ற சுழல் வட்டத்திற்குள் இருந்து விடுபடவேண்டும் என்பதே ஆன்மீகவாதிகளின் விருப்பமாகும். இவர்கள் பார்வையில் பிறப்பு என்பது தவிர்க்கப்படவேண்டிய ஒன்று. ஏனெனில் இது துயரம் மிகுந்தது.

ஒருவன் நூறு வயதுவரை வாழ்ந்தான் என்றால் அதில் சரிபாதி ஆண்டுகள் உறக்கத்தில் போய்விடும். ஐம்பதாண்டுகளில் விவரமறியா குழந்தைப் பருவம் சிறார்ப் பருவமாக பதினைந்தாண்டுகள் போய்விடும். எஞ்சிய ஆண்டுகளில் பசி, நோய், முதுமை எனத் துன்பத்தை எதிர்கொள்வதாக மனித வாழ்க்கை அமையும்.

இக்கருத்துகளை உள்ளடக்கிய பாசுரம் ஒன்றைப் பாடிய தொண்டரடிப் பொடிஆழ்வார் இக்காரணங்களால் பாடலின் இறுதியில் பிறவி வேண்டேன் என்ற வேண்டுதலையும் அரங்கநாதர் முன்வைத்துப் பாடலை முடிக்கிறார். அப்பாடல் வருமாறு:

'வேதநூல் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவரேலும்
பாதியு முறங்கிப் போகும் நின்றதில் பதினை யாண்டு
பேதைபா லகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகரு ளானே'

இவ்வாறு பிறப்பை ஒரு துன்பமாகக் கருதிய கருத்து நிலைக்கு மாறாகத் 'திரும்பவும் திரும்பவும் பிறப்பேன்' என்ற குரல் ஒலித்துள்ளது. இக்குரலுக்குரியவர் ரகுநாதன் என்றும் தொ.மு.சி. என்றும் சுருக்கமாக அழைக்கப்படும் நம் தோழர் தொ.மு.சிதம்பர ரகுநாதன்தான். இந்த ஆண்டு அவரது நூற்றாண்டாகும்.

'திரும்பவும் திரும்பவும் பிறப்பேன்' என்று அவர் கூறும்போது பிறந்து என்ன செய்யப் போகிறீர்? என்ற கேள்வி எழக் கூடாதே! எனவே அதற்கான விடையையும் 'இங்கு தீமைகள் யாவையும் வேரற அறுப்பேன்' என்று அடுத்த வரியில் கூறிவிட்டு, கவிதையைத் தொடர்கிறார். நாமும் அக்கவிதையைப் பின் தொடர்வோமே!

திரும்பவும் திரும்பவும் பிறப்பேன் இங்கு
தீமைகள் யாவையும் வேரற அறுப்பேன்.
பெரும்புவி யிதனில் வறுமையும் துயரும்
பிணிகளும் போரும் இருந்திடும் வரையில்.

(திரும்பவும்...)

வாளினை யோங்கிநான் வருவேன் இங்கு
வஞ்சகர் தம்மொடு வெஞ்சமர் புரிவேன்.
சூளுரைத் தேன்; இதை மறவேன் எந்தச்
சோதனை வந்திடும் போதினும் தவறேன்.

சாந்தியின் செய்தியும் உரைப்பேன் அதைத்
தடுப்பவர் தமக்கோ எமனாய் இருப்பேன்.
மாந்தர்கள் தமக்குள் வன்பகை மூட்டி
வாழ நினைப்பவர் சூழ்ச்சியை முறிப்பேன்.

கண்களைத் திறந்துநான் வருவேன்அந்தக்
காட்சியில் வையக மாந்தரை வருத்தும்
புண்கள் எவையெவை எவையெனப் பார்ப்பேன்;
போக்கிடும் மார்க்கமும் கண்டவை தீர்ப்பேன்.

செந்தழல் ஏந்திநான் வருவேன் வாழ்வில்
செத்துளம் மாய்ந்து கிடந்திடும் மாந்தர்
சிந்தையைக் கொதித்தெழச் செய்வேன் அந்தத்
தீயினில் புன்மைகள் மாய்ந்திடச் செய்வேன்.

சொற்களைக் கொண்டுநான் வருவேன் காணும்
அண்ட சராசரம் அனைத்தையும் மாந்தர்
இருகரம் அதனுள் வசப்படத் தருவேன்;
ஈசர்க்கு நிகராய் மனிதனைப் புரிவேன்.

அறிவொளி கொண்டுநான் வருவேன் காணும்
அண்ட சராசரம் அனைத்தையும் மாந்தர்
இருகரம் அதனுள் வசப்படத் தருவேன்;
ஈசர்க்கு நிகராய் மனிதனைப் புரிவேன்.

பிறவிகள் எடுத்திடச் சளையேன் இதைப்
பிணியெனக் கருதிநான் கடவுளை அழையேன்.
கருவினில் வளரும் சிசுக்குலம் யாவின்
கருத்திலும் புகுந்து கனலாய்ப் பிறப்பேன்.

(திரும்பவும்...)

இக்கவிதையைத் திரும்பவும் திரும்பவும் படியுங்கள். உங்கள் இலட்சியப் பயணத்தின் வழிநடைப் பாடலாக அமைந்து உங்கள் பயணத்தின் இலக்கை நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

---

## 90வது அமைப்பு தின கருத்தரங்கம்

அனைத்திந்திய முற்போக்கு எழுத்தாளர் சம்மேளனத்தின், 90வது அமைப்பு தின கருத்தரங்கம் 09.04.2025 அன்று, சாத்தூர் தனுஷ்கோடி அரங்கத்தில் நடைபெற்றது. த.க.இ.பெ. செயற்குழு உறுப்பினர் வ.நவநீதகிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றினார். சாத்தூர் கிளைச்செயலாளர் கு.கணேசன் தலைமையுரை நிகழ்த்தினார். த.க.இ.பெ. மாநிலப் பொதுச்செயலாளர் மரு.த.அறம் சிறப்புரை ஆற்றினார். நிகழ்வை மாநிலக் குழு உறுப்பினர் உ.இராமசுப்பிரமணியன் ஒருங்கிணைத்தார். சாத்தூர் கிளைச் செயலாளர் கு.கணேசன் பாடல்கள் பாடினார். அழகுரேவதி நன்றியுரை நல்கினார்.

## தக்கலை கிளையில் படிப்புரை நிகழ்வு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தக்கலை கிளையின் சார்பில் 'படிப்புரை' நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வை கவிஞர் ஹாமீம் முஸ்தபா துவக்கி வைத்தார் 'சோவியத் செவ்வியல் இலக்கியங்கள்' குறித்து சாகித்திய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் சா.தேவதாஸ், எழுத்தாளர் மீரான் மைதீன், எழுத்தாளர் பேரா.குமார செல்வா ஆகியோர் உரையாற்றினார்கள்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலத் தலைவர் எழுத்தாளர் எஸ்.கே.கங்கா நிறைவுரை ஆற்றினார். நிகழ்வில் மாவட்டச் செயலாளர் முனைவர் விஜயகுமார். பொருளாளர் கவிஞர் நாகராஜன், கிளைத் தலைவர் கவிஞர் ஜி.எஸ்.தயாளன், செயலர் கவிஞர் எம்.எம்.பைசல், பொருளாளர் ஐ.தர்மசிங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்தநாள் விழா

**பட்டுக்கோட்டை:** பட்டுக்கோட்டை மணிக்கூண்டு அருகே உள்ள மக்கள் கவிஞர், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் சிலைக்கும், மக்கள் கவிஞரின் மணிமண்டபத்திற்கும், சட்ட மேதை அம்பேத்கர் சிலைக்கும், எழுத்தாளர் ஜீவபாரதி தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் செயலாளர் சுப.பாலதண்டாயுதம் அனைவரையும் வரவேற்க, விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் சி.பக்கிரிசாமி, கட்சியின் ஒன்றியச் செயலாளர் பூபேஷ்குப்தா, கட்சியின் நகரச் செயலாளர் எம்.சுதாகர், பெருமன்றத்தின் தலைவர் வழக்குரைஞர் பிரகாசம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**சாத்தூர் கிளை:** தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சாத்தூர் கிளை மற்றும் எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி அறக்கட்டளை இணைந்து நடத்திய, பட்டுக்கோட்டையார் பிறந்த நாள் பாட்டரங்கம் தனுஷ்கோடி அரங்கில் நடைபெற்றது. அழகுரேவதி வரவேற்புரை ஆற்ற, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலப் பொதுச் செயலாளர் மருத்துவர் த.அறம் தலைமை தாங்கினார்.

கவிஞர் கலிங்கல் சுவாமிநாதன், அறிவொளி இராமமூர்த்தி, கு.கணேசன், புதுச்சேரி ஆதிராமன், ஜெமிமா டெய்சி ராணி, இனியாள் புகழேந்தி, சாத்தூர் மகாலட்சுமி, முருகலட்சுமி, செல்லையா, நல்லமுத்துக்கனி, நெல்லை சடகோபநம்பி, சே.அறச்செல்வி, தபேலா முத்துப்பாண்டியன் இசையில் பட்டுக்கோட்டையார் எழுதிய பாடல்கள் பாடப்பட்டன. பெருமன்ற மாவட்டச் செயலாளர் நவநீதகிருஷ்ணன், உ.இராமசுப்பிரமணியன், பழனிக்குமார், திருக்குறள் முத்துக்குமாரசாமி, சரஸ்வதி தனுஷ்கோடி ராமசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர். விஜயலட்சுமி நன்றி கூறினார். கு.கணேசன் நிகழ்வை ஒருங்கிணைத்தார்.



**திருத்தணி கிளை:** தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகரக் கிளை தொடக்க விழாவும், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த நாள் விழாவும், நேரு நகர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், மாவட்டச் செயலாளர் கருணை மாரி தலைமையில் நடைபெற்றது. பள்ளி தலைமை ஆசிரியர் எ.தா.திருநாவுக்கரசு, புரந்தரன் சிறப்புரை ஆற்றினர். கணபதி இளங்கோ பட்டுக்கோட்டை பற்றி உரையாற்றினார். இறுதியில் மாணவர்களுக்குச் சான்றிதழும் பரிசும் வழங்கப்பட்டன. திருத்தணி நகரக் கிளை அமைப்பாளராக தமிழாசிரியர் பூ.நா.யோகேஸ்வரி தேர்வு செய்யப்பட்டார்.

## பராரி திரைப்படத்திற்கு பி.கே.ரோசி தலித் சினிமா விருது

கேரளத் திரைத்துறையின் முதல் தலித் கதாநாயகி பி.கே.ரோசி பெயரில் நிறுவப்பட்ட, பி.கே.ரோசி தலித் சினிமா விருது, 2025 ஆண்டின் சிறந்த படத்திற்காக 'பராரி' இயக்குநர் எழில் பெரியவேடி, எழுச்சித் தமிழர் முனைவர் தொல்.திருமாவளவன் எம்.பி அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

## இந்திய கிராமம் - நூல் வெளியீட்டு விழா

இந்திய கிராமப்புற வாழ்வில் நிலவும் சாதியமைப்பை, மார்க்சியப் பார்வையில் அலசி, ஒரு புரிதலை ஏற்படுத்தும் இந்திய கிராமம் என்ற சிறு ஆய்வு நூலினை கர்நாடகா மூத்த வழக்கறிஞர் ரவீந்திர தன்வந்த் ஹலிங்கலி எழுதி, கவிஞர் நாணற்காடன் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். த.க.இ.பெருமன்றத்தின் கோவை மாவட்டக் குழு, நூலின் வெளியீட்டு விழாவை கோவை தியாகிகள் நிலையத்தில் நடத்தியது. தொல்லியல் ஆய்வாளர் முனைவர் ந.இராஜேந்திரன் தலைமை வகித்தார். வழக்கறிஞர் கே.சுப்ரமணியன் நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார்.

பொறியியல் பொதுத்தொழிலாளர் சங்கத்தின் பொருளாளர் ஏ.சுப்ரமணியம், ஓவியர் சூரியமூர்த்தி நூலினைப் பெற்றுக் கொண்டனர். எல்ஜசி கோபி, மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் சேகர் அண்ணாதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கவிஞர் நாணற்காடன் ஏற்புரை நிகழ்த்தினார். மாவட்டப் பொருளாளர் எஸ்.கோட்டியப்பன் நன்றி கூறினார். இஸ்கஃப் மாநிலப் பொதுச்செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன், வரதராஜபெருமாள், கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் மௌ.குணசேகர் உள்ளிட்டோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

# தோழர் நல்லகண்ணுக்கு ஆனந்த விகடன் வழங்கிய ‘பெருந்தமிழர் விருது’



ஆனந்த விகடன் ‘பெருந்தமிழர் விருது’ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், விடுதலைப் போராட்ட வீரர் இரா.நல்லகண்ணு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் இரா. முத்தரசன், சு.வெங்கடேசன் எம்.பி., முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் சு.திருநாவுக்கரசு எம்.பி., முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன், எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன், க.மாரிமுத்து எம்.எல்.ஏ., விகடன் நிர்வாக இயக்குநர் பா.சீனிவாசன் ஆகியோர் தோழர் நல்லகண்ணுவுக்கு விருது வழங்கினர்.

ஆனந்த விகடன் குழுமம் பெருந்தமிழர் விருதையும் ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலையையும் தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு வழங்கியது. விருதுத் தொகை ஒரு லட்சம் ரூபாயைக் கட்சி அலுவலகப் பராமரிப்புச் செலவிற்காக தோழர் நல்லகண்ணு வழங்கினார்.



### அலகாபாத் உயர்நீதிமன்ற தீர்ப்பைக் கண்டித்து

# இந்திய மாதர் தேசிய சம்மேளனம் நகல் எரிப்பு ஆர்ப்பாட்டம்

பெண்களுக்கு எதிரான பாலியல் வழக்கில் அலகாபாத் உயர்நீதிமன்றம் சமீபத்தில் தீர்ப்பு ஒன்றை வழங்கி உள்ளது. அதில் பெண்களின் துப்பட்டாவைப் பிடித்து இழுத்தாலோ, மார்பில் கை வைத்தாலோ பாலியல் வழக்கில் வராது என்று கூறியுள்ளது. இந்தத் தீர்ப்பானது பெண்களின் சுயமரியாதையை அவமதிப்பதாகும். இதை எதிர்த்து இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில் மாநிலம் தழுவிய தீர்ப்பு நகல் எரிப்புப் போராட்டம் 29.4.2025 அன்று நடைபெற்றது.

திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, தஞ்சைதெற்கு, புதுக்கோட்டை, வேலூர், இராமநாதபுரம், சேலம், அரியலூர், கள்ளக்குறிச்சி, கடலூர், திருவண்ணாமலை, திருச்சி புறநகர், திருச்சி மாநகர், திருவள்ளூர் ஆகிய ஊர்களில் நடைபெற்றது.



திருவாரூர்



சேலம்


இராமநாதபுரம்



கடலூர்



தஞ்சை தெற்கு

Posted at Egmore RMS Patrika Channel, Chennai - 600 008.
16 மே 04 மே 10 2025
ஜனசக்தி
JANASAKTHI Tamil Weekly Cell: 9444331138
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

## ஆளுநர் ஆர்.என்.ரவி சட்ட மீறலும், அதற்கு துணை போகும் துணை ஜனாதிபதியின் போக்கைக் கண்டித்து

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலம் தழுவிய கறுப்புக்கொடி போராட்டம்







**தமிழ்நாடு ஆளுநரின் அரசியல் சாசன விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும், உச்ச நீதிமன்ற தீர்ப்பை மீறி பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மாநாட்டைக் கூட்டும் ஆளுநர் ஆர்.என். ரவியின் சட்ட மீறலுக்குத் துணை போகும் துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் ஆகியோரைக் கண்டித்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், கறுப்புக் கொடி ஏந்திப் போராட்டம் 25.4.2025 அன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது.**

**சேலம்:** சேலம் கோட்டை ஸ்டேட் பேங்க் முன்பு மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் தலைமையில், கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.ராதாகிருஷ்ணன், மாநிலக் குழு உறுப்பினர் பா.தினேஷ், மாவட்டச் துணைச் செயலாளர்கள் எம்.ராமன், ஏ.கந்தன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

**திருப்பூர்:** திருப்பூர் மாவட்டம் அவிநாசி புதிய பேருந்து நிலையம் அருகில், கட்சியின் ஒன்றியச் செயலாளர் இரா.முத்துச்சாமி தலைமையில், மாவட்டத் துணைச் செயலாளர் எம்.மோகன், மாவட்டப் பொருளாளர் வி.பி.பழனிச்சாமி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

**தேனி:** தேனி காவல் நிலையம் எதிரில், மாவட்டச் செயலாளர் கி.பெருமாள் தலைமையிலும், கம்பம் ஒன்றியம் காந்தி சிலை அருகே, மாவட்டச் செயற்குழு உறுப்பினர் எம்.வி.கல்யாணசுந்தரம் தலைமையிலும், உத்தமபாளையத்தில் ஒன்றியச் செயலாளர் வீ.பாண்டி தலைமையிலும், போடி வள்ளுவர் சிலை அருகே நகரச் செயலாளர் கே.சத்தியராஜ் தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**ராமாநாதபுரம்:** பரமக்குடியில் மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பெருமாள் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் என்.கே, ராஜன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எஸ்.எம். ஜெயசீலன், ஆர். கருணாநிதி, பரமக்குடி நகரச் செயலாளர் கே.ஆர்.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**விருதுநகர்:** இராஜபாளையத்தில தேசபந்து திடலில் மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி தலைமையில், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் இரவி, எஐடியுசி மாவட்டச் செயலாளர் முத்துமாரி, இடைகமிட்டிச் செயலாளர்கள் கணேசமூர்த்தி, இராமச்சந்திரன், விஜயன், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் பகத்சிங், விதொச வரதராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

◆ விருதுநகர் பழைய பேருந்து நிலையம் எதிரில் நகரச் செயலாளர் பாண்டியன் தலைமை வகித்தார். கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன், திருச்சுழி நரிக்குடி ஒன்றியச் செயலாளர் செல்வம், விருதுநகர் வடக்கு ஒன்றியச் செயலாளர் சக்கணன், மாவட்ட துணைச் செயலாளர் சமுத்திரம் ஆகியோர் உரை ஆற்றினார்கள்.






















**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் தலைமை அஞ்சலகம் முன்பாக, கட்சியின் தெற்கு மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி தலைமையில், மாவட்ட துணைச் செயலாளர் கோ.சக்திவேல், மாவட்டப் பொருளாளர் பேராசிரியர் பாஸ்கர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சி.சந்திரகுமார், வீரமோகன், தி.திருநாவுக்கரசு, அ.பன்னீர்செல்வம், ஆர்.இராமச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

**செங்கல்பட்டு:** செங்கல்பட்டு மாவட்டம் சிங்கப்பெருமாள் கோவிலில் மாவட்டச் செயலாளர் ஏ.ராஜ்குமார் தலைமையில், முன்னாள் மாவட்டச் செயலாளர் எல்.மேகநாதன், மாவட்ட துணைச் செயலாளர் வெ.வீராசாமி, விதொச மாவட்ட தலைவர் பிஎஸ்.எல்லப்பன், மாவட்டக் குழு உறுப்பினர் கே.வி.சேகுவேராதாஸ், விதொச மாவட்டச் செயலாளர் பி.எஸ்.ராமலிங்கம் ஆகியோர் பங்கேற்றனர்.

**தூத்துக்குடி:** தூத்துக்குடியில் மாநகரச் செயலாளர் ஜி.தனலட்சுமி தலைமையில், கட்சியின் மாவட்டச் செயலாளர் பி.கரும்பன், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் லோகநாதன், வி.ச.கிருஷ்ணமூர்த்தி, மாடசாமி, ஞானசேகர் ஆகியோர் பங்கேற்றனர்.

**குமரி:** குமரியில் கட்சியின் மாவட்டச் செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் மாவட்டப் பொருளாளர் பி.தாமரைசிங் முன்னிலையில், கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் எஸ்.கே. கங்கா துவக்கி வைத்தார். மாவட்டக் குழு உறுப்பினர்கள் எஸ்.ராஜீ, மரியதாஸ், மகேஷ், மாதர் சம்மேளனத்தின் மாவட்டச் செயலாளர் செல்வராணி, மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.அனில்குமார் முடித்து வைத்தார்.

**தருமபுரி:** தருமபுரியில் மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம் தலைமையில், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், மாவட்ட துணைச் செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன், மாநிலக் குழு உறுப்பினர் எஸ்.கமலாமூர்த்தி ஆகியோர் பேசினார்கள்.

**திருச்சி:** திருச்சியில் மாநகர் மாவட்டச் செயலாளர் சிவா, புறநகர் மாவட்டச் செயலாளர் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் அகில இந்திய விவசாயச் சங்க தேசியக் குழு உறுப்பினர் இந்திரஜித், மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், திருச்சி மாவட்ட ஏஐடியுசி பொருளாளர் ராமராஜ், மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் அஞ்சுகம் உள்ளிட்டோர் உரையாற்றினர். புறநகர் மாவட்டப் பொருளாளர் பக்கிரிசாமி நன்றி கூறினார்.

**தென்காசி:** தென்காசி வாசு ஒன்றியச் செயலாளர் ப.வேலு தலைமையில் சிபிஐ மாவட்டச் செயலாளர் த.இசக்கித்துரை, விதொச மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அந்தோனிராஜ், பரமசிவம், மாவட்டக் குழு உறுப்பினர்கள் கே.பழனிச்சாமி, ஈஸ்வரன் ஐயப்பன், சீனிவாசன், சிவசுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்றனர்.

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறையில் மாவட்டச் செயலாளர் அ.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது.







Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: T.M.Murthi, Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.